

சித்திரை புதுவருட விடுமுறையில் காலி ஹிந்துருவ பகுதி ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த முன்னாள் ஜனாதிபதி ரணில், தனது அரசியல் வாழ்வு சுயசரிதையை அங்கும் எழுதினாரென தெரிகிறது.

தங்கியிருந்த ஹோட்டல் நிர்வாகம் நடத்திய சித்திரை புதுவருட நிகழ்விலும் ரணில் கலந்துகொண்டு வெற்றியீட்டியோருக்கு பரிசுகளை வழங்கியுள்ளார்.

தனது சுயசரிதையை முதலில் ஆங்கிலத்திலும் பின்னர் சிங்களம், தமிழ் மொழிகளிலும் வெளியிடத் தீர்மானித்துள்ளாராம் ரணில்.

**உஷ்**


# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 213 விசுவாவசு வருடம், சித்திரை மாதம் 08 ஆம் திகதி திங்கட்கிழமை (21.04.2025) ஹிஜ்ரி 1446, ஷவ்வால் - 22, 0115 886187- விலை ரூ.40 பக்கங்கள் 12


## கமெண்ட் கந்தர்



தேர்தல் நடந்தால் என்ன, நடக்காவிட்டால் என்ன? முதலில பொருளாதாரப் பிரச்சினைய தீருங்கடாப்பா என்பதுதான் மக்களின் நிலைப்பாடு பாருங்கோ...



மதித்தல்... கேட்டல்... செயற்படல்...!

பக்கம் 04



மறுதலிக்கப்படக்கூடாத நீதி!

பக்கம் 04



ஸ்கேட்டிங் சம்பியனான அலிசா லியூ மீண்டும் களத்தில்

பக்கம் 12

### - ஈஸ்ரர் தினத் தாக்குதல் விசாரணை -

# பொறுப்பை நிறைவேற்றுவேன்!

## ஜனாதிபதி அநுரகுமார பகிரங்க உறுதிமொழி



நா.தினுஷா

"அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கிலேயே 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று கொடூர குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இதுவரையில் இடம்பெற்ற ஒவ்வொரு விசாரணையும் உண்மையான சந்தேகநபரை தலைமறைவாக்கும் நோக்கிலேயே முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்களின் சகல அறிக்கைகளும் மக்களுக்கோ அல்லது குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கோ ஒப்படைக்கப்படவில்லை. சில ஆவணங்களின் சில பகுதிகளை மூடிமறைத்துவிட்டே விசாரணை அறிக்கைகளாக வெளியிட்டார்கள். எனவே,...

» 02 பக்கம்

## புனிதப்பேழையை வணங்க கண்டியில் திரண்ட மக்கள்



» 02பக்கம்

### - உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் -

## விசாரணை அறிக்கை சி.ஐ.டியிடம் கையளிப்பு




உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பாக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை மற்றும் ஆவணங்கள் அடங்கிய தொகுதிகள் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் அறிவுறுத்தலின்பேரில் நேற்று (20) குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

» 02 பக்கம்

## திட்டமிட்டபடி நடைபெறுமா ஒத்திவைக்கப்படுமா?




### உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் தீர்க்கமான முடிவு இன்று

நடக்கவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் தீர்க்கமான முடிவுகள் இன்று திங்கட்கிழமை எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

» 02 பக்கம்

### - இந்தியா அதிருப்தி -

## இலங்கை - பாகிஸ்தான் கடற்படை பயிற்சி இரத்து

திருகோணமலை கடற்பகுதியில் இலங்கை - பாகிஸ்தான் கடற்படைகளின் கூட்டுப் பயிற்சி கைவிடப்பட்டுள்ளது.

தனது நாட்டின் பாதுகாப்பு தொடர்பாக இந்தியா கவலை தெரிவித்ததைத் தொடர்ந்து, அந்தப் பயிற்சி கைவிடப்பட்டுள்ளது. 'இலங்கையின் வடகிழக்கு கடலோரப் பகுதியில்...

» 02 பக்கம்

## ஆசாத் மௌலானாவை விசாரணை செய்க

### கத்தோலிக்க திருச்சபை வேண்டுகோள்



''உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சூத்திரதாரிகளை கண்டுபிடிப்பதற்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனின் செயலாளர் ஆசாத் மௌலானாவை விசாரணை செய்யவேண்டும்'' என கொழும்பு மறை மாவட்ட தொடர்பாடல் இயக்குநர் அருட்தந்தை...

» 02 பக்கம்









# சீனா ஹார்பர் இன்ஜினியரிங் கோர்ப்பரேசனுக்கு பில்லியன் கணக்கான ரூபா நிலுவை செலுத்தல்

## சீன நிறுவனத்தின் கோரிக்கை நிராகரிப்பு

15 ஆண்டுகளுக்கு முன்னர் திறக்கப்பட்ட தெற்கு அதிவேக வீதியின் கொட்டாவ - தொடங்கொட பகுதியை நிர்மாணிப்பதற்காக சீனா ஹார்பர் இன்ஜினியரிங் கோர்ப்பரேசனுக்கு பில்லியன் கணக்கான ரூபா நிலுவையை செலுத்த வேண்டும் என்ற கோரிக்கையை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை நிராகரித்துள்ளது.

2011இல் திறக்கப்பட்ட 35 கிலோ மீற்றர் நீளமான இந்த வீதிப் பகுதிக்கு செலுத்தப்படாத பணம் என்று வலியுறுத்தும் 7.91 பில்லியனுக்கான கோரிக்கை கடிதத்தை சீன நிறுவனம், வீதி அதிகார அபிவிருத்தி அதிகார சபைக்கு அனுப்பியுள்ளது.

அத்துடன், பணம் செலுத்துவதற்கான காலக்கெடு 2025 மார்ச் 31ஆம் திகதி வரை வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், நிலுவைத் தொகை எதுவும் இல்லை என்ற அடிப்படையில் கோரிக்கையை நிராகரித்து, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் இயக்குநர், குறித்த சீன நிறுவனத்துக்கு பதில் அனுப்பியுள்ளார்.

அதேநேரம், இந்த நீடித்த சர்ச்சை குறித்து அதிகாரசபை இப்போது ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிடம் தெரிவித்து குற்றவியல் விசாரணைக்கு அழைப்பு விடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# மழையால் டெங்கு, சிக்குன்குனியா பரவும் அபாயமென எச்சரிக்கை

தற்போது பெய்து வரும் மழையால் டெங்கு மற்றும் சிக்குன்குனியா பரவும் அபாயம் அதிகம் இருப்பதாக இலங்கை பொது சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் செயலாளர் சமில் முத்துகுட தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், டெங்குவை பரப்பும் நுளம்புகள் மூலமாகவும் சிக்குன்குனியா பரவுகிறது. நீண்ட வார இறுதி விடுமுறை மற்றும் பாடசாலை விடுமுறை காரணமாக, பலர் சுற்றுலா சென்றுள்ளனர்.

**சுற்றுச்சூழல் சுத்தப்படுத்தல்**

இவர்கள் தங்கள் வீடுகளையும் சுற்றுப்புறத்தையும் சுத்தம் செய்யும் வாய்ப்பை இழந்துள்ளனர். இதன் காரணமாக, நுளம்புகள் பெருகும் இடங்களை சுத்தம் செய்யும் வாய்ப்பு காணப்படாததால், அவை அதிகரித்துள்ளன.

டெங்கு மற்றும் சிக்குன்குனியா நோய்கள் ஒரே நுளம்பால் பரவுகின்றன. இதன் காரணமாக, சுற்றுப்புறத்தை தொடர்ந்து சுத்தம் செய்வதன்மூலம் நுளம்பு பெருக்கத்தைத் தடுக்க பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றன என குறிப்பிட்டுள்ளார்.

# பொலிஸ் வாகனங்களை வாடகைக்கு அமர்த்திய புலமைப்பரிசில் பயிற்சி ஆசிரியர் குறித்து விசேட விசாரணை





தனியார் நிகழ்வொன்றுக்காக பொலிஸ் வாகனங்களை தவறாகப் பயன்படுத்திய 05ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பயிற்சி ஆசிரியர் குறித்து பொலிஸார் விசாரணையைத் தொடங்கியுள்ளனர்.

பொலிஸ் செய்தித் தொடர்பாளர் எஸ்.எஸ்.பி.புத்திக மனதுங்க இது தொடர்பில் தெரிவிக்கையில்,

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் தேர்ச்சி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வுக்காக வாகனங்களை அந்தப் பெண் ஆசிரியர் கோரியதாகக் கூறினார்.

இந்நிகழ்வில் 8,000 மாணவர்கள் மற்றும் 35,000 பெற்றோர் கலந்து கொள்வார்கள் என்றும் இதன் காரணமாக பாதுகாப்பு நடவடிக்கைகள் தேவை என்றும் அவர் கூறியதாக எஸ்.எஸ்.பி. புத்திக மனதுங்க கூறினார்.

"நாங்கள் ஒரு புலனாய்வு சோதனை நடத்தினோம். இந்நிகழ்வில் குழந்தைகள் சம்பந்தப்பட்டிருந்ததாலும், பின்னணி சரிபார்ப்பு தெளிவாக இருந்ததாலும் கோரிக்கையை நாங்கள் அங்கீகரித்தோம். 20 பொலிஸார், சில பொலிஸ் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஒரு பொலிஸ் காரை ரூ. 200,000 அளவான கட்டணத்துக்கு வழங்கினோம். கட்டணம் முழுமையாக செலுத்தப்பட்ட பின்னரே நாங்கள் சேவையை வழங்கினோம்" என்று அவர் கூறினார்.

இருப்பினும், டியூஷன் ஆசிரியை வாகனங்களை கோரப்பட்ட நோக்கத்துக்காகப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, தனது நற்பெயரை உயர்த்திக் கொள்ள பயன்படுத்தியதாக அவர் கூறினார்.

எனவே, பொலிஸ் வாகனங்களை தவறாகப் பயன்படுத்தியதற்காக அவர் மீது பொலிஸ் விசாரணை தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

தனிநபர்கள் தனிப்பட்ட பயன்பாட்டுக்காக பொலிஸ் வாகனங்களைப் பயன்படுத்தலாமா என்று கேள்வி எழுப்பப்பட்டபோது, டிக்கெட் பெற்ற மற்றும் பொதுவான நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் நிகழ்வுகளுக்கு பொலிஸ் வாகனங்களை வழங்குகிறது.

டிக்கெட் பெற்று வருமானம் ஈட்டும் நிகழ்வுகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு மற்றும் வாகனங்களைக் கோரலாம். இவை திரைப்பட படப்பிடிப்புகள், தனியார் திருவிழாக்கள் மற்றும் இசை நிகழ்ச்சிகள், நலன்புரி நிகழ்வுகள் போன்ற நிகழ்வுகள். ஒரு உளவுத்துறை சோதனை நடத்தப்படுகிறது. மேலும் அனுமதியின் அடிப்படையில், சேவைகள் கட்டணத்துக்காக வழங்கப்படுகின்றன. இது பொலிஸ்துறைக்கு கூடுதல் வருமானமாக கொள்ளப்படுகிறது. பெறப்பட்ட பணம் அரசாங்கத்துக்கு மாற்றப்படுகிறது.

இருப்பினும், பாடசாலைகள், நலன்புரி மற்றும் தேசிய நிகழ்வுகள் தொடர்பான நிகழ்வுகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு இலவசமாக வழங்கப்படுகிறது. மேலும் தனிநபர்களின் தனிப்பட்ட பயன்பாட்டுக்காக பொலிஸ் வாகனங்கள் ஒருபோதும் வழங்கப்படாது என்பதை மீண்டும் அவர் வலியுறுத்தினார்.

# கொட்டாஞ்சேனை கரையோர பொலிஸ் பிரிவுகளுக்கு போக்குவரத்து கட்டுப்பாடு

கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவு மற்றும் கரையோர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீதிகளில் இன்று திங்கட்கிழமை (21) போக்குவரத்து மட்டுப்படுத்தப்படும் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கொட்டாஞ்சேனை புனித லூசியா தேவாலயத்தில் இருந்து கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம் வரையில் ஊர்வலம் மற்றும் கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் நடைபெறும் சிறப்பு ஆராதனை காரணமாக போக்குவரத்து மட்டுப்படுத்தப்படவுள்ளது.

ஊர்வலம் காலை 07.00 மணிக்கு கொட்டாஞ்சேனை புனித லூசியா தேவாலயத்தில் இருந்து ஆரம்பமாகி போன்ஜின் சந்திப்பில் இடதுபுறம் திரும்பி, கல்பொத்த சந்தியிலிருந்து கல்பொத்த வீதி வழியாக ஜம்பட்டா வீதிக்குச் சென்று ஜம்பட்டா வீதி வழியாக கரையோர புனித அந்தோனியார் தேவாலயம் வரை செல்ல திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி, இன்றைய தினம் காலை 07.00 மணிமுதல் காலை 11.45 மணி வரை கரையோர பொலிஸ் பிரிவில் உள்ள வீதிகள் தற்காலிகமாக மூடப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனவே, போக்குவரத்து நெரிசலைக் குறைக்க பொதுமக்கள் மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறும் தெரிவித்துள்ளனர்.

இன்றைய தினம் காலை 07.00 மணிமுதல் 11.45 மணிவரை கரையோர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீதிகள் தற்காலிகமாக மூடப்படவுள்ளதால், போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் மாற்று வீதிகளை முடிந்தவரை பயன்படுத்துமாறு பொலிஸார் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளனர்.

## புனிதப்பேழையை...

புனித தலதா கண்காட்சியை முன்னிட்டு இலட்சக்கணக்கான பக்தர்கள் கண்டி நகருக்கு வருகை தந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

16 ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெறும் இந்த நிகழ்வு ஸ்ரீ தலதா மாளிகையில் இடம்பெற்றுவரும் நிலையில் மக்கள் வரிசை 02 கிலோமீற்றருக்கும் அதிகமான தூரத்தில் காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

புத்தரின் புனித தந்ததாதுவை வணங்குவதற்காக இலட்சக்கணக்கான பக்தர்கள் தலதா மாளிகையை நோக்கி படையெடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

வரலாற்று சிறப்புமிக்க கண்டி நகரில் இடம்பெறும் இந்நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியதுடன் தொடர்ந்து பத்து நாட்கள் இடம்பெறவுள்ளன.

நாடு முழுவதிலுமிருந்து இரண்டு மில்லியனுக்கும் அதிகமான பார்வையாளர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் இதுவரை இல்லாத அளவு மக்கள் திரண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

## ஆசாத் மௌலானாவை...

ஜூட் கிருசாந்த வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

''உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் சூத்திரதாரிகளை கண்டுபிடிப்பதற்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனின் செயலாளர் ஆசாத் மௌலானா முக்கியமானவராக காணப்படுகின்றார்.

சனல் 4 ஆவணப்படத்துக்கு தகவல்களை வழங்கிய ஆசாத் மௌலானாவை விசாரணை செய்தால் பல விபரங்கள் தெரியவரலாம்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விசாரணைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து அதிகாரிகள் கிறிஸ்தவ திருச்சபையுடன் தகவல்களை வழங்கி வருகின்றனர்.

விசாரணைகள் இடம்பெறும் விதம் குறித்து நாங்கள் திருப்தியடைந்துள்ளோம்.

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்கள் தொடர்பில் சுமார் 25 பேர் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் சிலர் இந்தச் சம்பவம் தொடர்பில் முக்கிய தகவல்கள் தெரிந்தவர்கள்.

கத்தோலிக்க சமூகத்தினரும் இலங்கையர்களும் உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதிக்காக காத்திருக்கின்றனர். ஜனாதிபதி இந்த தாக்குதல்கள் குறித்த உண்மைகளை வெளிப்படுத்துவார். விசாரணைகளை முன்னெடுத்துச் செல்வார் என அவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர் என குறிப்பிட்டுள்ளார்.

## இந்தியா அதிருப்தி...

திருகோணமலை அமைந்துள்ளது. இது இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில், இந்தியாவின் கடல்சார் பாதுகாப்பு நலன்களுக்கு முக்கிய மையமாகக் கருதப்படுகிறது.

இந்நிலையில், திருகோணமலை கடற்பகுதியில் இலங்கை - பாகிஸ்தான் கடற்படைகள் கூட்டுப் பயிற்சி மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டது. இதுதொடர்பாக தமது பாதுகாப்பு நலன் சார்ந்த கவலையை இலங்கையிடம் இந்தியா தெரிவித்தது. இதையடுத்து அந்தக் கூட்டுப் பயிற்சி கைவிடப்பட்டது' என்று இதுகுறித்து தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. எனினும், இதுகுறித்து இலங்கை மற்றும் பாகிஸ்தானிடமிருந்து உத்தியோகபூர்வமாக எந்தத் தகவலும் வெளியாகவில்லை.

## உயிர்த்த...

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன், ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் துரிதமாகவும் புதிய திசையிலும் முன்னெடுக்கப்பட்டன.

அதன்படி, உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலின் 06ஆவது ஆண்டு நிறைவில், இந்த மிலேச்சத்தனமான தாக்குதல் குறித்து சுயாதீனமான மற்றும் பாரபட்சமற்ற விசாரணையை உறுதி செய்வதில் அரசாங்கம் வெற்றி பெற்றுள்ளது.

இந்தக் குற்றத்தை கால ஓட்டத்தில் மறைந்து விடாமல், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படும் என்ற உத்தரவாதத்தை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வழங்கியுள்ளார் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஈஸ்ரர் தினத்...

மூடிமறைக்கப்பட்டிருந்த சகல அறிக்கைகளையும் விசாரணைக்காக குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அனுப்பி வைத்துள்ளேன். அதற்கமைய, இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பான பிரதான சூத்திரதாரிகளை சட்டத்தின் முன்னிறுத்தி விரைவில் அவர்களை மக்கள் முன்னிறுத்தி எனது பொறுப்பை நிறைவேற்றுவேன்" என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

பொலனறுவையில் நேற்று (20) இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

''பரம்பரையினருக்கும் ஒருசில குடும்பத்தினருக்கு மாத்திரம் உரித்தாக இருந்த அரசியல் அதிகாரம் முதன்முறையாக கடந்த செப்டெம்பர் மாதத்துடன் பொதுமக்களுக்கு உரித்தானது. கடந்த இரு தேர்தல்களிலும் மக்கள் எங்களின் கோரிக்கையை ஏற்று முழு பாராளுமன்றத்தையும் சுத்தம் செய்தார்கள். இந்த நிலையில் எதிர்வரும் மே மாதத்தில் உள்ளூராட்சி மன்றத்தேர்தல் இடம்பெறவுள்ளது. இந்தத் தேர்தலில் உள்ளூராட்சி மன்றங்களிலும் பலமாக மக்கள் ஆணையை பெற்றுக்கொள்வது மிக முக்கியமானதாகும். பொலனறுவையிலுள்ள 08 உள்ளூராட்சித் தொகுதிகளையும் தேசிய மக்கள் சக்தி வெற்றிக்கொள்ளும் என்பது உறுதியாகும்.

தேசிய மக்கள் சக்தியை தவிர தெரிவு செய்வதற்கு வேறு எந்த அரசியல் மாற்றுத் தெரிவும் இல்லை. நாட்டை வெற்றிப்பாதையில் கொண்டு செல்வதற்கான பொறுப்பு, நோக்கத்தை கொண்ட ஒரேயொரு அரசியல் தரப்பு தேசிய மக்கள் சக்தி மாத்திரமே. கடந்த காலங்களில் மக்கள் பல்வேறு கட்சிகளுடன் பல்வேறு பிணைப்புடன் செயற்பட்டிருந்தனர். அந்த சகல பிணைப்புகளையும் தகர்த்தெரிந்து விட்டே தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் அதிகாரத்தை வழங்கினார்கள். எனவே அன்றை போன்றே இப்போதும் மக்கள் எங்களுக்கு வழங்கிய அதிகாரத்தை மக்களுக்கு முரணாக பயன்படுத்தமாட்டோம். மக்களின் நன்மைக்காக மாத்திரமே பயன்படுத்துவோம்.

வீழ்ச்சிப்பாதையிலிருந்து படிப்படியாக இந்த நாட்டை எமது அரசாங்கம் கட்டியெழுப்பும். மீண்டும் எப்போதும் எதிர்கால சந்ததியினர் இதுபோன்ற எந்தவொரு நெருக்கடியையும் சந்திக்க இடமளிக்க மாட்டோம். 30 வருடகால யுத்தத்தை சந்தித்திருந்தோம். இனவாதத்தால் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் சந்தேகம். நம்பிக்கையின்மை, வைராக்கியம் என்பன அதிகரித்தன. பொதுவாக தேர்தல் காலப்பகுதியில் கிழக்கு மாகாண மக்கள் முஸ்லிம் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களை தெரிவு செய்யும் நிலைமையே இருந்தது. அதேபோன்று வடக்கு மாகாண மக்கள் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களை தெரிவு செய்வார்கள். தெற்கு மக்கள் சிங்களக் கட்சிகளின் தலைவர்களைத் தெரிவு செய்வார்கள். பெருந்தோட்ட மக்கள் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களை தெரிவு செய்வார்கள். இவ்வாறே வரலாற்றில் தேர்தல்கள் இடம்பெற்றிருந்தன.

அதாவது தேர்தல் காலத்தில் எம்மை பிளவுபடச் செய்தார்கள். வாக்குகளுக்காக ஒவ்வொருவருக்கும் எதிராக இனவாதத்தை தூண்டினார்கள். சிங்கள மக்களின் வாக்குகளை பெற முஸ்லிம் மக்களை தூண்டி விடுவார்கள். முஸ்லிம் மக்களின் வாக்குகளை பெற தமிழ் மக்களை தூண்டிவிட்டார்கள். இது எமது நாட்டு மக்களை பெரும் நெருக்கடிக்குள்ளாக்கியது மாத்திரமல்லாமல், சிவில் யுத்தத்தையும் சந்தித்தோம்.

இருந்தபோதும் கடந்த பொதுத் தேர்தலில் வடக்கு, கிழக்கு, தெற்கு மக்கள் என்ற பேதமின்றி சகலரும் ஒன்றுதிரண்டு தேசிய மக்கள் சக்தி தலைமையிலான இந்த அரசாங்கத்தை தோற்றுவித்துள்ளார்கள். ஆறு மாதங்களுக்கு மேல் நாங்கள் ஆட்சி செய்துகொண்டிருக்கிறோம். ஆனால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீண்டும் இனவாத மோதல்களை ஏற்படுத்த இடமளிக்க மாட்டோம். தற்போது நடைமுறையிலிருக்கும் சட்டங்கள் போதவில்லை என்றால் புதிய சட்டங்களை உருவாக்கியாவது இனவாதத்தை தோற்கடித்து தேசிய சமத்துவத்தை உருவாக்குவோம்.

இன்று(நேற்று) உயிர்த்த ஞாயிறு தினமாகும். 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே கொடூரத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து 2024ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம்வரை, அதாவது இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்று ஐந்தரை வருடங்கள் வரை உண்மையான சூத்திரதாரிகளை மூடிமறைக்கும் நோக்கிலேயே விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. உண்மையான குற்றவாளிகளை தலைமறைவாக்குவதே முக்கிய நோக்கமாக இருந்தது. இந்தச் சம்பவம் தொடர்பான உண்மையான சந்தேகநபர்களை சட்டத்தின் முன்கொண்டுவருவதற்கு 2019 ஆம் ஆண்டில் ஆட்சியிலிருந்த அரசாங்கத்துக்கோ அல்லது 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஆட்சிக்கு வந்த அரசாங்கத்துக்கோ எந்தவொரு அவசியமும் இருக்கவில்லை. எனவே, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய உண்மையான சந்தேகநபர்களை தலைமறைவாக்குவதே அவர்களின் நோக்கமாக இருந்தது. ஆறு வருடங்கள் கடந்துவிட்டன. நாங்கள் ஆட்சியை பொறுப்பேற்று ஆறு மாதங்கள் கடந்துவிட்டன. இந்த ஆறு மாத காலப்பகுதியில் இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை படிப்படியாக சட்டத்தின் முன் கொண்டுவருவதற்காக விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். முன்னெடுத்துக்கொண்டிருக்கிறோம்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் சகல அறிக்கைகளும் மக்களுக்கோ அல்லது குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கோ ஒப்படைக்கப்படவில்லை. சில ஆவணங்களின் ஒருசில பகுதிகளை மூடிமறைத்துவிட்டே விசாரணை அறிக்கை வெளியிடப்பட்டது. ஆனால் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் சகல அறிக்கையும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைத்துள்ளேன். மூடிமறைக்கப்பட்டிருந்த சகல அறிக்கைகளையும் விசாரணைக்காக அனுப்பி வைத்துள்ளேன். அதில் பல்வேறு பரிந்துரைகளும் இருக்கின்றன. அவற்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதுபோன்ற இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய பல்வேறு சர்ச்சைக்குரிய சம்பவங்களும் இருக்கின்றன. வவுணதீவு பிரதேசத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் கொலை செய்யப்பட்ட இடத்தில் ஜெக்கற் ஒன்றை கொண்டு சென்று அங்கு வைத்து வந்தவர் யார் என்பது தொடர்பில் சந்தேகம் இருக்கிறது. ஒருசில இமி இலக்கங்கள் இருக்கின்றன. அந்த இமி இலக்கங்கள் கொண்ட தொலைபேசிகளை பயன்படுத்தியவர்கள் யார் என்பதிலும் சந்தேகம் இருக்கிறது. சகல சந்தேகங்களையும் தெளிவுபடுத்திக்கொண்டு விசாரணைகளை முன்னோக்கிக் கொண்டுசென்றுக் கொண்டிருக்கின்றோம். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய உண்மையான சூத்திரதாரிகளை வெளிப்படுத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளோம். அதனை விரைவில் நாங்கள் நிறைவேற்றுவோம்'' என்றார்.

## திட்டமிட்டபடி...

தேர்தல் வேட்பு மனு நிராகரிப்புக்கு எதிரான மேலும் சில எழுத்தாணை மனுக்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இன்று எடுக்கப்படவிருக்கின்றன. அவை தொடர்பில் நீதிமன்றத்தின் முடிவு இன்று தெரிய வரக்கூடும்.

அதேசமயம், அரசியல் கட்சிகளின் நிர்வாகிகளைத் தேர்தல் ஆணையம் இன்று சந்திக்கின்றது. அப்போது உள்ளூராட்சித் தேர்தலை ஒரே நாளில் நடத்துவதில் உள்ள சிக்கல்களை தேர்தல் ஆணையம் வெளிப்படுத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்களை ஏற்பது தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவை உள்வாங்கி, அவற்றுக்கேற்ப அந்தந்த உள்ளூராட்சி சபைகளுக்குரிய வாக்குச் சீட்டுகளை அச்சிடுவது போன்ற நெருக்கடிகள் காரணமாக, குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான உள்ளூராட்சி சபைகளுக்குரிய தேர்தல்களை முன்னர் குறிப்பிட்ட மே 06ஆம் திகதியில் நடத்துவதில் சிக்கல்கள் இருப்பதை தேர்தல் ஆணையம் கட்சி பிரமுகர்களிடம் இன்று எடுத்துரைக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதனால், அப்படி நெருக்கடிக்குரிய சபைகளின் தேர்தல்களை அடுத்த கட்டமாக பிறிதோர் தினத்தில் நடத்தும் திட்டத்தை தேர்தல் ஆணையம் இன்று வெளியிடக்கூடும்.

தேர்தல்களைக் கட்டம் கட்டமாக நடத்தினால், முதல் கட்டத்தில் நடத்தப்படும் தேர்தல்களின் முடிவுகள் அடுத்த கட்டத் தேர்தல்களின் வாக்களிப்பில் அரசியல் ரீதியான பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடும் என்ற கருத்தை தேர்தல் ஆணையக் கூட்டத்தில் முன் வைப்பதற்கு பல கட்சிகளும் தயாராக இருக்கின்றன என்றும் தெரிய வருகின்றது.

இந்தக் காரணத்துக்காக எல்லா தேர்தல்களையும் ஒரேடியாக நடத்தக்கூடியதாக ஒன்றாகப் பிற்போடும்படி பல கட்சிகளினதும் பிரதிநிதிகள் இன்று தேர்தல் ஆணையத்தை நேரில் கோரக் கூடும் என்றும் தெரிகிறது.

அப்படி தேர்தல்களைத் தள்ளிப் போடுவதற்கான அதிகாரம் தேர்தல் ஆணையத்துக்கு இருக்கின்றதா என்ற சட்டக் கேள்வியும் எழாமல் இல்லை. ஆயினும், 2023 அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல் இதேபோன்று பல தடவைகள் ஒத்திவைக்கப்பட்ட பின்னரே, நிரந்தரமாக நடைபெறாமல் தள்ளிப் போயிற்று என்ற விடயமும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்தப் பின்புலத்தில் இன்று தேர்தல் ஆணையத்திடமிருந்து திட்டவட்டமான செய்தி அல்லது சமிக்ஞை வெளிவரக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தினசரி பலாபலன்கள்

**குரோதி வருடம் சித்திரை மாதம் 08ஆம் நாள் திங்கட்கிழமை**

**மேஷம்** பயணங்களால் சிரமங்களை அனுபவித்தாலும் தேவைக்கான பண வரவு உண்டு. சுறுசுறுப்பாக செயற்படுங்கள்.

**ரிஷபம்** எதிர்பாராத சுபச் செய்தியால் மன மகிழ்ச்சி உண்டு. தெய்வ தரிசனம் செய்து கொள்வீர்கள்.

**மிதுனம்** மௌனம் காப்பதே சிறந்தது. யாருடனும் விதண்டாவாதம் செய்ய வேண்டாம். கோபத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

**கடகம்** தொழிலிடத்திலுள்ள பெண் உத்தியோத்தர்களால் இலாபங்கள் உண்டு. காதல் களியாட்டங்களில் ஈடுபடுவீர்கள்.

**சிம்மம்** உடல், மனம் சோம்பிக் காணப்படும். வீண் டென்ஷன் வேண்டாம். தொழில் விடயத்தில் அக்கறையோடு செயற்படுங்கள்.

**கன்னி** தேவைக்கேற்ப பணம் ஏதோ வழியில் வந்து மகிழ்விக்கும். குழப்பமற்ற மனதுடன் சேவையாற்றுவீர்கள்.

**துலாம்** திட்டமிட்டப் பயணங்களால் இலாபம் உண்டு. தாய் மற்றும் தாய் வழி உதவிகள், வாகன சுகம் உண்டு.

**விருச்சிகம்** புத்திசாதுர்யமாக அனைத்திலும் வெற்றிகாண்பீர்கள். அத்தியாவசியச் செலவுகள் இருக்கும்.

**தனுசு** திடீர் பணவரவுக்கான வாய்ப்பு உள்ளது. வாதத் திறமையைக் காட்டுவீர்கள். குடும்ப சுகம் உண்டு.

**மகரம்** தேவையற்ற கவலைகளை விட்டுவிட்டு மகிழ்ச்சியுடன் இருங்கள். உடல் நலத்தை பார்த்துக் கொள்ளுங்கள்.

**கும்பம்** வீணான டென்ஷன் வேண்டாம். உங்கள் பணம் பொருள்களை பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள்.

**மீனம்** தொட்டது துலங்கும் நாள். மன அமைதியுடன் அனைத்தையும் சாதிப்பீர்கள். வெற்றியுடன் வீடு திரும்புவீர்கள்.

| | |
|---|---|
| **திதி** | : அட்டமி மு.இ.6.58 வரை பின் நவமி |
| **நட்சத்திரம்** | : உத்திராடம் பி.ப.12.37 வரை பின் திருவோணம் |
| **பிறை** | : தேய்பிறை |
| **யோகம்** | : மரண யோகம்; பி.ப.2.13 வரை பின் அமிர்த யோகம் |
| **வார சூலை** | : கிழக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| **நல்ல நேரம்** | : காலை- 5.59 – 6.59 மணிவரை பகல்- 12.59 – 1.59 மணிவரை மாலை- 2.59 – 3.59 மணிவரை |
| **ராகு காலம்** | : 7.29 – 8.59 மணிவரை |
| **எமகண்டம்** | :10.29–11.59மணிவரை |
| **குளிகை** | : 1.29 – 2.59 மணிவரை |
| **சந்திராஷ்டமம்** | : மிதுன ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும் |

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று பிற்பகல் 12.37 வரை**
பரணி, ரோஹிணி, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சித்திரை, விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**இன்று பிற்பகல் 12.37 மேல்**
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், திருவாதிரை, பூசம், மகம், உத்திரம், சித்திரை, சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும்,

**தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும். அதிர்ஷ்டம், சுகம் உண்டு.**

**விசேட தினம்** : நடேஷர் அபிஷேகம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739



உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் நேற்று (20) சிறப்பு பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
(படங்கள் – லலித் பெரேரா)

# சடுதியாக அதிகரிக்கும் தேர்தல் விதிமீறல்கள்

## இதுவரை 1,874 முறைப்பாடுகள் பதிவு

உள்ளூராட்சித் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கையை தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

அதனடிப்படையில், இதுவரை 1,874 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், 09 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 162 முறைப்பாடுகள் பதிவாகியுள்ள நிலையில், தேர்தல் குறித்த வன்முறைச் சம்பவம் எதுவும் பதிவாகவில்லை என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பான முறைப்பாடுகளே இதுவரை அதிகமாக கிடைக்கப்பெற்றுள்ளன. அது 1,245 ஆக பதிவாகியுள்ளது.

அதனடிப்படையில், இதுவரையான முறைப்பாடுகளில் 1,607 முறைப்பாடுகளுக்கான தீர்வுகள் கண்டறியப்பட்ட நிலையில், 267 முறைப்பாடுகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.



# புனித தந்த தாதுவை புகைப்படம் எடுத்த விவகாரம்

## விசாரணையை ஆரம்பித்தது சி.ஐ.டி.

புனித தந்ததாதுவை புகைப்படம் எடுத்து சமூக ஊடகங்களில் வெளியிட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணையை ஆரம்பித்துள்ளது.

வரலாற்று சிறப்புமிக்க கண்டி தலதா மாளிகையின் "ஸ்ரீ தலதா வழிபாடு" கடந்த வெள்ளிக்கிழமை (18) முதல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (27) வரை 10 நாட்களுக்கு நடைபெறுகிறது.

இந்நிலையில், ஸ்ரீ தலதா வழிபாட்டுக்குச் சென்ற யாத்திரிகர் ஒருவர் அங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ள புனித தந்ததாதுவை புகைப்படம் எடுத்து சமூக ஊடகங்களில் வெளியிட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மத அனுஷ்டானத்தில் கலந்துகொள்ளும் யாத்திரிகர்கள் கைதொலைபேசிகளை பயன்படுத்தவோ அல்லது நினைவுச்சின்னத்தை புகைப்படம் எடுக்கவோ முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது.

சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட புகைப்படம் ஸ்ரீ தலதா வழிபாடு நிகழ்வில் எடுக்கப்பட்டதா, யாத்திரிகர் ஒருவரால் பிடிக்கப்பட்டதா அல்லது டிஜிட்டல் முறையில் மாற்றப்பட்டுள்ளதா? என்பதைக் கண்டறிய குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

# தலதா வழிபாட்டுக்குவரும் பக்தர்களுக்காக சலுகைகளை விரிவுபடுத்த வேலைத்திட்டம்

## கண்டி மாவட்ட செயலாளர் இந்திக்க உடவத்த தெரிவிப்பு

**(எம்.ஏ.அமீனுல்லா)**

தலதா வழிபாட்டுக்காக கண்டிக்கு வரும் இலட்சக்கணக்கான பக்தர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை விரிவுபடுத்தும் விசேட வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக கண்டி மாவட்ட செயலாளர் இந்திக்க உடவத்த தெரிவித்துள்ளார். பக்தர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக கண்டி மாவட்ட செயலகத்தில் நேற்று (20) இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மாவட்ட செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதன்படி, இக்கலந்துரையாடலில் கண்டிக்கு வரும் அனைத்து பக்தர்களுக்கும் அன்ன தானம் வழங்க தீர்மானிக்கப்பட்டதாகவும் அதற்கு பிரதேச செயலாளர்களின் ஆதரவும் பெற்றுக் கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் அரிசி, தேங்காய் உள்ளிட்ட உலருணவுகள் இலங்கை இராணுவத்தினரின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்டு அன்னதான இடங்களுக்கு வழங்கப்படும்.

தலதா மாளிகைக்கு வணக்க வழிபாடுகள் நிமித்தம் அதிகளவான மக்கள் கண்டிக்கு வருவதாகத் தெரிவித்த மாவட்டச் செயலாளர், அவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்தித் தருவதும் பட்டினி கிடக்காமல் இருக்க வேண்டியதும் தனது பொறுப்பும் மாவட்ட பிரதேச செயலாளர்களினது கடமையுமாகும்.

இதன்படி, ஜனாதிபதி செயலகத்தின் முயற்சியின் ஊடாக மேலதிக வசதிகள் கிடைக்கப் பெறுவதாகவும் பரோபகாரர்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் உதவ முன்வந்துள்ளதாகவும் மாவட்ட செயலாளர் தெரிவித்தார்.

அத்துடன், ஜனாதிபதியின் ஏற்பாட்டில் பல நடமாடும் கழிவறை அமைப்புகள் ஏற்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்நிகழ்வில் கண்டி மேலதிக மாவட்ட செயலாளர்களான லலித் எதம்பாவல மற்றும் நிலுகா புலத்கே, கண்டி பிரதான மாநகர வைத்திய அதிகாரி வைத்தியர் பசன் ஜயசிங்க, கண்டி கங்கவட்ட கோரலய பிரதேச செயலாளர் மேனகா ஹேரத் மற்றும் கண்டி மாவட்ட பிரதேச செயலாளர்கள் மற்றும் அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# ரிப்பர் வாகன சில்லுக்குள் சிக்குண்டு ஒன்றரை வயது குழந்தை உயிரிழப்பு!



**(பு.கஜிந்தன்)**

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பாள் குளம் பகுதியில் ஒன்றரை வயது பெண் குழந்தை ஒன்று ரிப்பர் வாகன சில்லுக்குள் சிக்குண்டு உயிரிழந்துள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பாள் குளம் பகுதியிலுள்ள வீடொன்றில் தந்தை செலுத்திய ரிப்பர் வாகன முன் சில்லுக்குள் சிக்கி ஒன்றரை வயது பெண் குழந்தை உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை (18) பிற்பகல் 5.15 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

சம்பவ இடத்தைச் சென்று பார்வையிட்ட கிளிநொச்சி மாவட்ட பதில் நீதிவான் எஸ்.சிவபாலசுப்ரமணியம் உடற்கூற்று விசாரணைகளின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் கையளிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# கெப் வண்டி விபத்தில் எண்மர் காயம்

**(செ.திவாகரன்)**

இராகலையில் இருந்து அம்பாறையின் சியம்பலாண்டுவ நோக்கி பயணித்த கெப் வண்டியொன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 08 பேர் படுகாயமடைந்து நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இராகலை, உடுவமதுரவில் உள்ள உறவினர் வீட்டுக்கு வந்த ஒரு குழுவினர் சியம்பலாண்டுவவுக்கு திரும்பிச்சென்று கொண்டிருந்தபோது, வலப்பனை, நில்தண்டஹின்ன அம்பன்வெல்ல பகுதியில் அவர்கள் பயணித்த கெப் வண்டியில் திடீரென தடுப்புக்கட்டை (பிரேக்) செயலிழந்ததன் காரணமாக வேகக் கட்டுப்பாட்டை இழந்து பிரதான வீதியில் கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வலப்பனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# தலதா யாத்திரையை முன்னிட்டு மேலதிகமாக இரு ரயில்கள்

## 28ஆம் திகதிவரை சேவையில்

ஸ்ரீ தலதா யாத்திரையில் பங்கேற்கும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், கொழும்பு கோட்டைக்கும் கண்டிக்கும் இடையில் மேலதிகமாக இரு ரயில்கள் 28ஆம் திகதிவரை இயக்கப்படும் என்று ரயில் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, கொழும்பு கோட்டையிலிருந்து இரவு 7:55 மணிக்கு புறப்பட்டு நள்ளிரவில் கண்டியை சென்றடையும். அதே நேரத்தில் மீண்டும் திரும்பும் ரயில் இரவு 8:30 மணிக்கு கண்டியிலிருந்து புறப்பட்டு நள்ளிரவில் கொழும்பு கோட்டையை வந்தடையும் என தெரிவித்துள்ளது.

இந்த சிறப்பு ரயில்கள் பயணத்தின்போது ரம்புக்கனை ரயில் நிலையத்தில் நிறுத்தப்படும்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 ஏப்ரல் 21 ஆம் திகதி, திங்கட்கிழமை

# மறுதலிக்கப்படக் கூடாத நீதி!

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தின் 06ஆவது வருட நினைவு தினம் இன்றாகும்.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுவெடிப்புகள் 2019 ஏப்ரல் 21ஆம் திகதி வணிகத் தலைநகர் கொழும்பு உட்பட மூன்று நகரங்களில் இடம்பெற்றன. மூன்று கிறிஸ்தவக் கோவில்களிலும் மூன்று ஐந்து நட்சத்திர உணவு விடுதிகளிலும் இத்தொடர் குண்டுவெடிப்புகள் காலை 08.30க்கும் 09.15 மணிக்குமிடையில் நிகழ்ந்தன. 39 வெளிநாட்டவர்கள், 03 பொலிஸார் உட்பட குறைந்தது 253 பேர் வரை கொல்லப்பட்டனர். 500க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

கொழும்பு கொச்சிக்கடை, மட்டக்களப்பு, நீர்கொழும்பு ஆகிய இடங்களில் உள்ள தேவாலயங்களில் உயிர்ப்பு ஞாயிறு திருப்பலி நிகழ்வுகள் நடைபெற்றபோது குண்டுகள் வெடித்தன. ஏனைய குண்டுகள் கொழும்பின் நடுப்பகுதியில் அமைந்திருந்த ஷங்கிரிலா உணவகம், சினமன் கிராண்ட் உணவகம், கிங்ஸ்பரி உணவகம் ஆகிய மூன்று ஐந்து நட்சத்திர உணவு விடுதிகளில் வெடித்தன. இத்தாக்குதல்கள் தொடர்பாக 13 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் விசாரிக்கப்பட்டனர்.

இத்தாக்குதல்களில் ஒன்பது தற்கொலைதாரிகள் ஈடுபட்டதாகவும் இவர்கள் அனைவரும் இலங்கையர்கள் எனவும் தேசிய தவ்கீத் ஜமாத் என்ற உள்ளூர் அடிப்படைவாத இஸ்லாமிய ஆயுதக் குழுவைச் சேர்ந்தவர்களெனவும் இலங்கை அரசு அறிவித்தது. 2019 மார்ச் 15 இல் நியூஸிலாந்தில் இடம்பெற்ற கிறைஸ்ட்சேர்ச் பள்ளிவாசல் படுகொலைகளுக்குப் பழிவாங்கும் முகமாகவே இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கலாம் என அப்போதைய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்திருந்தார். ஆனால், இரு தாக்குதல்களுக்கும் நேரடித் தொடர்புகள் இருப்பதற்கான ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை என நியூஸிலாந்து அரசு அறிவித்தது.

2019 ஏப்ரல் 23 அன்று இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்.) என்ற இஸ்லாமியத் தீவிரவாத ஆயுதக்குழுவின் பன்னாட்டுப் பரப்புரை இணையதள அமாக் செய்திச் சேவை இலங்கைத் தாக்குதல்களை தமது உறுப்பினர்களே நடத்தியதாக அறிவித்தது. தமது குழுவுக்கு எதிரான நாடுகளின் குடிமக்களைத் தாக்குவதற்காகவே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனாலும், இஸ்லாமிய அரசுக் குழுவுக்கு எதிரான கூட்டமைப்பில் இலங்கை இல்லையெனவும் கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் இலங்கையர்களெனவும் ஊடகங்களால் சுட்டிக்காட்டப்பட்டன. இத்தாக்குதலில் ஈடுபட்டவர்களைப் புகழ்ந்து, இஸ்லாமிய அரசின் தலைவர் எனக் கருதப்படும் அபூபக்கர் அல்பக்தாதி என்பவர் 18நிமிடங்கள் உரையாற்றிய காணொளி வெளியிடப்பட்டது.

2009ஆம் ஆண்டு ஈழப்போர் முடிவின் பின்னர் நாட்டில் இடம்பெற்ற முதலாவது பெரிய தாக்குதல் நிகழ்வுகள் இவையாகும். இந்தப் பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்தின் பின்னர் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தாக்குதல்கள் தொடர்ந்து சில தினங்களாகப் பதிவாகியிருந்தன. அதன்பின்னர், இஸ்லாமியர்களை இலக்கு வைத்து நாட்டின் பல பகுதிகளில் வன்முறைகள் இடம்பெற்றன.

பல இஸ்லாமியர்களின் வீடுகள், வர்த்தக நிலையங்கள், பள்ளிவாசல்கள் தீ வைக்கப்பட்டு சேதமாக்கப்பட்டிருந்தன. ஆனால், எந்தவொரு இஸ்லாமியரோ இந்தத் தீவிரவாதத் தாக்குதலை ஆதரிக்கவில்லை. அந்த தாக்குதல்தாரியின் உடல்களைக் கூடப் பொறுப்பேற்கவில்லை.

ஒருசிலரின் அந்த நாசகார செயலால் இஸ்லாமிய சமூகத்துக்கு ஏற்பட்ட பாதிப்பு இன்னமும் தீர்ந்தபாடில்லை. அது தொடர்பான விசாரணைகள் நியாயமாக இடம்பெறாததும் உண்மையான குற்றவாளிகள் யாரெனக் கண்டறியப்படாததும் அதற்கு பிரதான காரணங்கள். ஆனால், இப்போதைய தேசிய மக்கள் சக்தி அரசு இந்த விசாரணைகள் நீதியாக நடக்குமென்றும் உண்மையான குற்றவாளிகள் அடையாளம் காணப்படுவரென்றும் அறிவித்திருக்கிறது. ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன்னர் இதன் முக்கிய சூத்திரதாரிகள் குறித்து விவரம் அறிவிக்கப்படுமென்று ஜனாதிபதி கூட அண்மையில் தெரிவித்திருந்தார்.

ஓரிருவரின் மத ரீதியான அதீத நம்பிக்கையைப் பயன்படுத்தி அவர்களை பகடைக்காய்களாக்கி இந்தச் சம்பவத்தை எவரும் புரிந்தார்களா என்பதே இந்த விடயத்தில் முதலில் கண்டறியப்பட வேண்டும். சஹ்ரானும் ஓரிருவரும் மாத்திரம் தனியே இந்தச் சம்பவத்தைப் புரிந்தார்கள் என்பது குழந்தைப்பிள்ளைக்கு சொல்லும் கதையாகவே இருக்கும். இந்தத் திட்டத்தைத் தீட்டியது முதல் குண்டுகளுடன் போக்குவரத்துச் செய்தது வரையான காலம் வரை அதற்குண்டான செலவுகள் ஒத்துழைப்பு, தொடர்பாடல்கள் என்பவற்றின் பின்னால் இருந்த சக்தி எது என்பது கண்டறியப்பட வேண்டும்.

ஈஸ்ரர் ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை சி.ஐ.டியிடம் ஒப்படைக்க ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் நேற்று தெரிவித்துள்ளமை வரவேற்கப்படவேண்டும். இதன்படி குறித்த அறிக்கைகள் ஜனாதிபதியின் செயலாளரால் குற்றப் புலனாய்வுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இந்த அறிக்கைகள் வெளிப்படுத்தப்படாமல் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. அந்த அறிக்கையில் உள்ள விபரங்களைக் கொண்டு சம்பந்தப்பட்டோர் தொடர்பில் விசாரணைகளைப் புதிய கோணத்தில் அரசு நடத்த வேண்டும். சாதாரணமாக ஓரிருவரைக் கைது செய்து சூத்திரதாரிகளைக் கைதுசெய்துவிட்டோமென முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைப்பதுபோல இந்த அரசும் செயற்படக் கூடாது. அதுவே இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு பெற்றுக்கொடுக்கும் நீதியாக இருக்கும் என்பதை வலியுறுத்தி தெரிவிக்க விரும்புகிறோம்.



# மதித்தல்... கேட்டல்... செயற்படல்!

**சு.குழந்தைசாமி**

நம்முடைய அன்றாட வாழ்வைக் கவனிப்போம். நாம் சக மனிதரை முதலில் மதிக்கிறோமா? அவர் என்ன நினைக்கிறார் என்பதை அவர் சொல்லவரும்போது காது கொடுத்துக் கேட்கிறோமா?

அவருடைய உருவம், நிறம், ஜாதி, மதம், கட்சி, பணப்பலம், நபர் பலம், கௌரவம், புகழ் போன்ற அடையாளங்களை வைத்து மட்டுமே அவரை அணுகுகிறோமே தவிர, அவர் சொல்வதை முழுமையாகக் கேட்பதில்லை. அலட்சியம் காட்டி, குறுக்கிட்டுப் பேசி, அவரைச் சீர்குலைக்கப் பார்க்கிறோம். இதன்மூலம் அவரைவிட நாம் ஒரு படி பெரியவர் என்ற நிலைப்பாட்டை உறுதி செய்ய முயல்கிறோம். 'நான் சொல்வதே சரி' என்று ஆணவம் கொண்டு பேச முயல்கிறோமே தவிர, பணிவுடன் அனுமதி பெற்றுப் பிறரிடம் பேச முயல்வதில்லையே.

இரண்டு பேருக்குள் ஒரு பிரச்சினையென்றால், மூன்றாம் நபரிடம் சொல்லித் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற ஓர் இயலாமையும் சுய இரக்கமும் நம்மிடம் குடிகொண்டிருக்கின்றன. நமக்குள் இருக்கும் சுய ஆளுமையுடனும் நம்பகத்தன்மையுடனும் இருவருக்குள்ளேயே பேசித் தீர்த்துக்கொள்ள முடியுமென்ற நம்பிக்கை நமக்கு வருவதில்லை.

இன்னொரு மிக மோசமான பழக்கம் நம்மிடம் உள்ளது. அது ஒருவரைப் பற்றிய தவறான வதந்திகளைப் பரப்பிவிடுதல்; வதந்திகளைக் கேட்க விரும்புதல்; மற்றவர்களுடைய வாழ்வின் இரகசியங்களை எல்லை தாண்டி அறிய விரும்புதல் ஆகியவை அதிகரிப்பதுதான் தொலைத்தொடர்பு சாதனங்கள் 'கிசுகிசு ' செய்திகளைப் பரப்புவதற்குக் காரணமாய் அமைகின்றன.

நம்மிடம் இன்னுமொரு மோசமான பழக்கம் உண்டு. நாம் ஏதாவது தவறு செய்தால் நாமே முன்வந்து அந்தத் தவறை ஒப்புக்கொள்ள மாட்டோம்; மன்னிப்புக் கேட்க மாட்டோம்; ஒரு தவறை மறைக்க மேன்மேலும் தவறுகளைச் செய்துகொண்டே இருப்போம்.

சட்டங்களை நாம்தான் நமக்காக இயற்றினோம். ஆனால், நாமே அவற்றை மதிக்க மாட்டோம். இது என்ன ஒரு முரண்பாடான வாழ்வியல்? மக்களைத் திருத்த கடுமையான சட்டங்கள் இயற்றப்பட்டாலும் அவற்றை நிறைவேற்ற கடுமையான மனிதர்கள் தேவைப்படுகிறார்கள். இந்த முயற்சி இறுதியில் சர்வாதிகார ஆட்சிக்குத்தானே இட்டுச்செல்லும். சுய சிந்தனையும் சுய கட்டுப்பாடும் சுய சார்பும் தனிமனித ஒழுக்கமாய் வளர்க்கப்படாததே இதற்கு மூலகாரணம் அல்லவா?

ஒழுக்கம் என்பது என்ன? ஒவ்வொரு குழந்தையும் சுயமாக யோசித்துக் கண்டறிந்து முடிவுக்கு வந்து அதன்படி அஞ்சாமல் சுய கட்டுப்பாட்டுடன் வாழ்வதுதானே உண்மையான ஒழுக்கம்?

எனவே, மக்கள் இப்போதிருந்தே ஒரு புதிய பண்பாட்டு வாழ்வியலை மேற்கொள்ள முன்வர வேண்டும். மற்றவர் தன்னிடம் பேச முன்வரும்போது, குறுக்கே பேசாமல் முழுமையாகக் கவனித்துக் கேட்க வேண்டும். தான் பேச வேண்டுமென்றால் பிறரிடம் பணிவுடன் அனுமதி பெற்றுப் பேச வேண்டும். இரண்டு பேருக்கிடையே உண்டாகும் பிரச்சினைகளை மூன்றாம் நபரிடம் சென்று உதவியை நாடாமல் தங்களுக்குள்ளேயே தீர்த்துக்கொள்ள முயல வேண்டும்.

மாற்றவே முடியாத அம்சங்களைக் குறைகூறிப் புலம்பாமல் மனமுவந்து ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும். வேற்றுமை பல இருப்பினும் சமத்துவம் பேண வேண்டும்.

ஒருவர் இல்லாதபோது அவரைப் பற்றி எந்தவித வதந்திகளையும் பேசுவதில்லையென்றும் பரப்புவதில்லையென்றும் முடிவெடுக்க வேண்டும்.

சிறிய தவறு, பெரிய தவறு எதுவாயினும் தானே முன்வந்து ஒப்புக்கொண்டு, இனி அப்படித் தவறு செய்வதில்லையென்று முடிவெடுக்க வேண்டும்.

பேராசையுடன் எதையும் எந்த வழியிலும் அடையலாம் என்ற மனப்போக்கை விடுத்து அறநெறி வழியில் அவசிய தேவைகளை மட்டுமே பெற முன்வர வேண்டும்.

சக மனிதனை மட்டுமல்ல, அனைத்து உயிரினங்களையும் நேசிக்க வேண்டும். எல்லோருக்கும் நல்வாழ்வு கிடைக்க உழைக்க வேண்டும்.

இந்த அடிப்படை வாழ்வியல் மதிப்பீடுகளைப் பின்பற்ற பாடசாலை, கல்லூரி மாணவர்களுக்கு பயிற்சியளிக்க வேண்டும்.

மாணவர்களுடைய சுயசிந்தனை, படைப்பாற்றல் மிளிரும் வகையில் அவர்களே இயற்கையில் இருந்தும் மற்றும் செய்யும் பணிகளில் இருந்தும் சுயமாய் கற்கும் வகையில் இன்றைய கல்வி முறையை மாற்ற வேண்டும். சுயசார்புடன் வாழ்வதற்குக் கைத்தொழில்களில் பயிற்சியும் ஓவியம், இசை ஆகிய நுண்கலைகளில் பயிற்சியும் மண்ணின் பெருமைகளை எடுத்தியம்ப அறிஞர்களுடனான சந்திப்பையும் ஏற்படுத்தித் தர வேண்டும்.

இன்றைய மாணவர்கள் ஒவ்வொருவரும் சுய சிந்தனை, சுய கட்டுப்பாட்டில் வளர முடிவெடுக்க வேண்டும். இதற்கான நாற்றங்கால்களாகக் கல்விக்கூடங்கள் மாற வேண்டும். இவற்றை இன்றிலிருந்தே நாம் செய்யத் தொடங்கினால் வருங்காலத்தில் நாம் விரும்பும் மாற்றங்கள் ஏற்படும். தனிமனித வாழ்விலும் சமூக வாழ்விலும் நாம் விரும்பும் மாறுதல்கள் எளிதில் ஏற்படும்.

*நன்றி - தினமணி*

## நக்கல் நமசிவாயம்




## இன்றைய நாளில்...

- 1782 – இரத்தினகோசின் நகரம் (இன்றைய பேங்கொக்) முதலாம் இராமா மன்னரால் அமைக்கப்பட்டது.
- 1944 – பிரான்ஸில் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது.
- 1964 – டிரான்சிட் - 5 பி.என். என்ற செயற்கைக்கோள் சுற்றுவட்டத்தில் இணைய முடியாமல் வளி மண்டலத்தினுள் மீளத் திரும்பியது. இதன்போது 0.95கி.கி. கதிரியக்க புளுட்டோனியம் பரவலாகச் சிதறியது.
- 1987 – கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 106 பேர் கொல்லப்பட்டனர்.
- 2019 – இலங்கை உயிர்த்த ஞாயிறு தின குண்டுவெடிப்புகள்: கொழும்பு உட்பட பல இடங்களில் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மூன்று கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் நட்சத்திர ஹோட்டல்களில் இஸ்லாமிய அரசு ஆதரவில் தேசிய தவ்கீத் ஜமாத் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் 277 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.

# கிளிநொச்சியில் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசார அலுவலகத்துக்கு தீ வைப்பு



கிளிநொச்சி - முரசுமோட்டை வட்டாரத்துக்குரிய தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசார அலுவலகம் நேற்று (20) அதிகாலை தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

கரைச்சி பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தியின் முரசுமோட்டை வட்டாரத்தின் தேர்தல் அலுவலகம் கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் திறந்துவைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டப் பொலிஸாரின் குற்றத் தடயவியல் பிரிவினர் தீவைப்பு தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

# புலிகளின் தலைவர் பிரபாகரன் மஹரகமயிலா? கட்டிடமொன்றில் தீ வைத்த காவலரால் பரபரப்பு



விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தங்கியிருந்ததாகக் கூறி மஹரகம நகரின் மையப் பகுதியில் உள்ள கட்டிடத்தின் பாதுகாப்பு நிலையத்துக்கு நேற்று முன்தினம் (19) தீ வைத்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபர் மாத்தறை பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய கட்டிடத்தின் பாதுகாப்பு அதிகாரி எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மஹரகம நகரின் மையப்பகுதியில் உள்ள ஒரு தனியார் வங்கி உட்பட பல நிறுவனங்களைக் கொண்ட கட்டிடத்தின் பாதுகாவலரே பாதுகாப்புச் சாவடிக்கு தீ வைத்ததாகக் கூறி கைதுசெய்யப்பட்டதாக மஹரகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விடுமுறை நாள் என்பதால் ஒரு தனியார் வங்கி உட்பட பல நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு வழங்குவதற்காக இந்த நபர் மட்டுமே கட்டிடத்தில் தங்கியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

பிற்பகல் 2.30 மணியளவில் பாதுகாப்பு காவலர் நிறுத்தப்பட்டிருந்த காவலர் இல்லத்தில் பிரபாகரன் தங்கியிருந்ததாகவும் அவரை கொளுத்துவதற்காக தீ வைக்க எரியக்கூடிய திரவம் பயன்படுத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

தீ விபத்தில் காவலர் இல்லத்தில் இருந்த ஒரு படுக்கை, ஒரு மேசை, ஒரு நாற்காலி, பல புத்தகங்கள் மற்றும் பாதுகாப்புக் காவல ரின் துணிகள் மட்டுமே முற்றிலுமாக எரிந்து நாசமாகியதாகவும் யாருக்கும் காயமேற்படவில்லையென்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தீ விபத்தைத் தொடர்ந்து, கோட்டே நகரசபை தீயணைப்புத் துறையின் பொறுப்பதிகாரி ஜி.டி.டி.பி. உட்பட எட்டு அதிகாரிகள் மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

இரண்டு தீயணைப்பு வாகனங்களுடன் வந்து தீயை முற்றிலுமாக அணைத்தனர். சந்தேக நபரைக் கைது செய்து விசாரித்தபோது, அவர் அளவுக்கு அதிகமாகப் போதைப் பொருள் உட்கொண்டிருந்ததும் மயக்க நிலையில் நடந்து கொண்டதும் தெரியவந்தது.

பிரபாகரன் அங்கு தங்கியிருந்ததால் தான் அந்த அறைக்கு தீ வைத்ததாக அவர் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் நீதித்துறை மருத்துவ அதிகாரியிடம் அனுப்பப்பட்டு, மருத்துவ அறிக்கையைப் பெற்று நுகேகொடை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# யாழில் நீரில் மூழ்கி உயிரிழந்த இளைஞனின் மரணத்தில் சந்தேகம்

## சம்பவம் குறித்து தெரிவித்த பெற்றோர் – உறவினர்கள் வழங்கிய திடுக்கிடும் தகவல்கள்

(பு.கஜிந்தன்)

கொடிகாமம் - வரணி பகுதியில் நீரில் மூழ்கி உயிரிழந்த சிலுசன் என்ற 23 வயது இளைஞன் குறித்து பல்வேறு திடுக்கிடும் தகவல்களை அந்த இளைஞனின் பெற்றோரும் உறவினர்களும் வெளிப்படுத்தியுள்ளனர்.

அவர்கள் இது குறித்து கருத்து தெரிவிக்கையில், எனது மகன் கடந்த வியாழக்கிழமை குளித்துவிட்டு வந்தவேளை 3.00 மணிக்குப் பின்னர் எனது மகனை அவரது நண்பர் அழைத்துச் சென்றார். அவருடன் சென்றுகொண்டிருந்தபோது இன்னொரு நண்பர் குளிக்க வருமாறு தொலைபேசியில் கூறியவேளை எனது மகன் அவரிடம் சென்றுள்ளார். இதன்போது கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் அவர்களுடன் இருந்துள்ளார்.

அந்தக் கேணியில் யாரும் குளிப்பதில்லை. அது கோவில் கேணி. தாமரைக்கொடி சிக்கி உயிரிழந்ததாகக் கூறியது பொய். அந்தக் கேணியில் தாமரைக் கொடியே இல்லை. மரண விசாரணை அதிகாரி, பொலிஸார், சட்டத்தரணி உள்ளிட்ட பலர் அந்தப் பகுதிக்கு வந்தனர். இரண்டுபேரை அந்தக் குளத்தில் இறக்கி குளத்தைப் பரிசோதித்துப் பார்த்தனர். ஆனால், இருவரும் எந்தவிதமான பாதிப்புமின்றி வெளியே வந்தனர். உயிரிழந்த மகனின் சேட்டும், செருப்பும் குளத்தின் கரையில் இருந்தன.

கேணியின் அருகே 3 ரின்கள் இருந்தன. ஆனால், உடற்கூற்றுப் பரிசோதனைகளில் இவர் மதுபானம் பாவித்ததாக அறிக்கையில் கூறப்படவில்லை. தண்ணீர் சுவாசப் பையின் உள்ளே சென்று அடைத்ததால் தான் மரணம் சம்பவித்ததாக அறிக்கையில் கூறப்படுகிறது. தோளில் பிடித்து அழுத்திய கண்டல் காயம் உள்ளது.

அவரது சடலம் தாண்டிருந்த இடத்தில் ஒரு நீளமான மீற்றர் கட்டையொன்று குற்றப்பட்டிருந்தது. அப்படி அவர் தாண்டிருந்தால் அந்தக் கட்டையில் பிடித்து ஏறியிருப்பார்.

மந்திகை வைத்தியசாலையில் எங்களது பிள்ளையின் சடலம் இருப்பதாகக் கேள்வியுற்று நாங்கள் அங்கே சென்றவேளை, அவரை வைத்தியசாலையில் சேர்ப்பித்தவர்கள் இருவர் பொய்யான பெயரைக் கொடுத்துள்ளனர் என்ற விடயம் தெரியவந்தது. ஏன் பொய்யான பெயர் கொடுக்க வேண்டும்? அன்றைய தினம் அவர் யாருடன் பேசினாரோ அவ்வளவு விபரங்களும் கைபேசியிலிருந்து அழிக்கப்பட்டிருந்தன. எங்களுடைய தம்பி ஒருவர் கைபேசியை வாங்கும்போது அங்கிருந்த ஒருவர் கைபேசியை பறித்தார். ஒரு மணித்தியாலம் அந்தக் கைப்பேசியை வழங்கவில்லை.

சடலம் தாண்டிருந்த இடத்தை நீதிவானுக்கு காட்டிய பொலிஸார் பின்னர் அங்கிருந்து சென்றுவிட்டனர். பிறகு அவர்கள் வரவில்லை. எங்களிடம் விசாரணைகளுக்கு வந்த பொலிஸார், நீதிமன்றத்தில் நீங்கள் சட்டத்தரணி வைக்கவேண்டாம், நாங்கள் உங்களுக்காக வாதாடுகின்றோம் என்றனர்.

அவரது உடலைத் தொட்டவேளை உடலில் சூடு இருந்தது. ஆகையால், சடலத்தைப் பிரேத அறையில் போடவேண்டாம் என நாங்கள் கூறியவேளை, அவரது நண்பர்கள் சடலத்தைப் பிரேத அறையில் போடுமாறு விடாப்பிடியாகக் கூறினார்கள். அவருக்கு அங்கே சிகிச்சையளிக்கப்படவில்லை என்ற சந்தேகம் எழுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் உறவினர்கள் வைத்தியசாலையில் இல்லை.



சிவரூபன் என்ற பெயரிலேயே கையொப்பமிட்டு அவரை வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். ஆனால், அந்த சிவரூபன் யார் என இதுவரை எமக்குத் தெரியவில்லை. உடனிருந்த நண்பர்கள் யாரும் இதுவரை சடலத்தைப் பார்ப்பதற்கு வீட்டுக்கு வரவில்லை.

கொடிகாமம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் ஒருவர் தான் கொடிகாமம் பொலிஸ் இல்லை, பருத்தித்துறை நிலையப் பொலிஸ் என்று மந்திகை வைத்தியசாலையில் வைத்துக் கூறியுள்ளார். ஆனால், அவர் கொடிகாமம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர். அவர் ஏன் பொய் கூற வேண்டும்?

இந்தச் சதியில் ஈடுபட்ட 4பேரை எமக்குத் தெரியும். ஆனால், இதில் பலர் தொடர்புபட்டதாகக் கூறப்படுகிறது. இந்தச் சம்பவத்தை சிலர் காணொளியாகவும் பதிவுசெய்துள்ளதாகக் கூறப்படுகிறது. எனவே, அந்தக் காணொளி யாரிடம் உள்ளது என்று தேடிப்பிடிப்பதோடு, நாங்கள் கூறுகின்ற நான்கு பேரிடமும் விசாரணைகளை மேற்கொண்டால் என்ன நடந்ததெனக் கண்டுபிடிக்க முடியும் - என்றனர்.

# மன்னாரில் பொலிஸாரின் சமிக்ஞையை மீறிச்சென்ற ரிப்பர் வாகனம் மீது சரமாரியாக துப்பாக்கிச் சூடு

## இருவர் கைது

(ஜோசப் நயன்)

மன்னார் அடம்பன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளமடு பகுதியில் சட்ட விரோதமாக மணல் ஏற்றிச்சென்ற ரிப்பர் வாகனத்தை கடமையில் ஈடுபட்ட அடம்பன் பொலிஸார் இடைமறித்த போது பொலிஸாரின் சமிக்ஞைக் கட்டமைப்பை மீறி பொலிஸார் மீது வாகனத்தால் மோதிச்செல்ல முற்பட்டபோது குறித்த ரிப்பர் வாகனத்தை நோக்கி பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.





குறித்த சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை (20) அதிகாலை மன்னார் அடம்பன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளமடு பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதனையடுத்து குறித்த வாகனத்தை தொடர்ந்தபோது குறித்த ரிப்பர் வாகனம் நிறுத்தப்பட்டது.

இதன்போது இந்த ரிப்பர் வாகனத்தில் சட்ட விரோதமான முறையில் ஏற்றிச்செல்லப்பட்ட மணல் மற்றும் உபகரணங்கள் மீட்கப்பட்டதாக அடம்பன் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் குறித்த ரிப்பரின் சாரதி மற்றும் உதவியாளர் அடம்பன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இரு நபர்களும் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சன்னார் கிராமத்தைச் சேர்ந்தவர்களெனவும் இவர்கள் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதோடு மீட்கப்பட்ட பொருட்களும் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன.

மேலதிக விசாரணைகளை அடம்பன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, அடம்பன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அரச மற்றும் தனியார் காணிகளில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்ற போதும் அடம்பன் பொலிஸார் மௌனம் காத்துவருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# யாழில் கஞ்சாவுடன் இருவர் கைது!



(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணம் - தட்டாதெரு சந்தியில் இரண்டு இளைஞர்கள் நேற்று (20) 52 கிராம் கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் போதைப்பொருள் தடுப்புப் பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் இருவரும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பலகத்துறையில் பரிசளிப்பு விழா

நீர்கொழும்பு, பலகத்துறை அல் -ஹிமா மகளிர் நலன்புரி அமைப்பும் அல்- பலாஹ் அஹதிய்யா பாடசாலையும் இணைந்து நடத்தும் புனித ரமழான் விருது வழங்கலும் பரிசளிப்பு விழாவும் நீர்கொழும்பு பலகத்துறை Maple Leaf Hotel வரவேற்பு மண்டபத்தில் அஹதிய்யாவின் தலைவர் நஸ்ரியா நஸ்மி தலைமையில் எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஹாஷிம் உமர் பௌண்டேஷன் ஸ்தாபகர் புரவலர் ஹாஷிம் உமர், கௌரவ அதிதியாக மௌலவி தாஹிர், விசேட அதிதிகளாக தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் மேலதிக ஆணையாளர் எம்.முஹம்மத், மேர்சிலங்கா நிறுவன பிரதிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.ஆர்.எம்.முனாஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன்போது போட்டி நிகழ்வுகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அதிதிகள் பரிசு வழங்கிக் கௌரவிப்பர்.

# யாழ். பல்கலையில் அன்னை பூபதியின் நினைவேந்தல்





(பு.கஜிந்தன்)

இந்தியப் படைகளின் ஆக்கிரமிப்புக்கெதிராக 31 நாட்கள் உண்ணா நோன்பிருந்து தாயக விடுதலைக்காக உயிர்நீத்த அன்னை பூபதியின் நினைவேந்தல்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றன.

யாழ்ப்பாண பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் நேற்றைய தினம் 37ஆவது ஆண்டு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போது அகவணக்கம் செலுத்தப்பட்டு, அன்னை பூபதியின் திருவுருப்படத்துக்கு சுடரேற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. மேலும் அன்னை பூபதி தொடர்பான நினைவுரையும் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

# தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு ‘அழகுராணி’ சர்வதேச போட்டி நிகழ்வு இலங்கையில் ஏற்பாடு






(அஷ்ரப் ஏ. சமத்)

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு உலக அழகுராணி சர்வதேச போட்டி நிகழ்வொன்று இலங்கையில் முதன் முதலாக சர்வதேச மட்டத்தில் கொழும்பில் எதிர்வரும் ஜூலை 20 - 27ஆம் திகதிகளில் நெலும் பொக்குன மண்டபத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக லலித் பெருக்கும தெரிவித்தார்.

ஏற்கனவே இலங்கை வாழ் முவினங்களையும் சார்ந்த இலங்கை இளம் பெண்கள் - ஆண்கள் தேர்வுகள் 12 நாடுகளில் நடைபெற்று வருகின்றன. அதற்கான சர்வதேச தரத்திலான நடுவர் குழு மேற்படி சர்வதேச நாடுகளில் ஒழுங்குகளைச் செய்துள்ளது. அதன்படி பிரான்ஸ் ஏப்ரல் 13ஆம் திகதி ரோமானியா, ஏப்ரல் 16ஆம் திகதி, ஐக்கிய அமெரிக்க ஏப்ரல் 16, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மே 20ஆம் திகதி, நியூசிலாந்து மே 25, ஐக்கிய இராச்சியம் மே 31, இத்தாலி ஜூன் 7, இலங்கை ஜூன் 21, கனடா ஜூன் 27, அவுஸ்திரேலியா ஜூலை 5, சவுத் கொரியா ஜூலை 5, ஜப்பான் ஜூலை 12 ஆகிய தினங்களில் சம்பந்தப்பட்ட நாடுகளில் நியமிக்கப்பட்ட நடுவர் குழுவினால் நடத்தப்பட்டு வருகின்றன.

இறுதி நாள் நிகழ்ச்சியில் ஜனாதி பதி, பிரதமர் கலாசார பௌத்த மத விவகார அமைச்சர் மற்றும் சம்பந்தப் பட்ட நாடுகளின் தூதுவர்கள் அதிதிக ளாக அழைக்கப்பட்டுள்ளனர்.

வெற் றிபெறும் பெண்கள் ஆண்கள் என 25 நபர்களுக்கு இலங்கையில் ஹோட்டல்களில் தங்கி நிற்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வெற்றி பெறுவோருக்கு பெறுமதிமிக்க பரிசுகள் வழங்கப்படும்.

அத்துடன், சுற்றுலாத்துறைக்கான விளம்பரம் மற்றும் சர்வதேச ஊடக நிறுவனங்களும் சர்வதேச பிரசார நடவடிக்கையில் ஈடுபட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி நாடுகளிலும் இலங்கையில் உள்ள 18-35 வயதுக்குட்பட்ட இலங்கையர்கள் வெளிநாடுகளில் குடிபெயர்ந்தவர்கள் உலக அழகுராணி 2025 முகநூல் மற்றும் சமூக ஊடக நிறுவனங்களில் குறிப்பிடப்பட்ட தொலைபேசி ஊடாகத் தொடர்புகொண்டு போட்டியில் கலந்துகொள்ள முடியுமெனவும் லலித் பெருக்கும தெரிவித்தார்.

இந்நிகழ்வில் டாக்டர் அனுசா பெர்னாண்டோ, கமல் முனசிங்க, நடிகை சங்கீதா வீரரத்ன போன்றோர் இவ்வூடக மாநாட்டில் கலந்து சிறப்பித்தனர்.


## தங்க நகைகள் ஏல விற்பனை

பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனம் எனும் வகையில் இலங்கை மத்திய வங்கியின் நிதிச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கும் நிறுவனமாக வணிக பணிப்பாளர்களது அனுமதியுடன் நடாத்திச் செல்லும் ஏஷியா எசட் ஃபினான்ஸ் பீ.எல்.சீ இன் கீழ் குறிப்பிடப்படும் கிளைகளில் 28/03/2025 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் வழங்கிய தொகையை செலுத்த குறிப்பிடப்பட்டிருக்கும் திகதியிலிருந்து 30 நாட்களை கடந்தும் கொடுப்பனவை செலுத்தத் தவறியுள்ள தங்கக் கடன்களுக்கு வைப்பாக அடகு வைத்துள்ள தங்க நகைகளை அடகுச் சட்டம் 85 ஆம் இலக்கத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக் கேற்ப கீழ்வரும் இடங்களில் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

| அடகு வைக்கப்பட்டுள்ள கிளை | ஏலமிடப்படும் திகதி | ஏல விற்பனை இடம் |
|---|---|---|
| அக்கரைப்பற்று, களவாஞ்சிக்குடி, கல்முனை, சம்மாந்துறை, மட்டக்களப்பு, செங்கலடி, வாழைச்சேனை, பொத்துவில், கிண்ணியா, திருகோணமலை, கந்தளாய், மூதூர், நிந்தவூர், சேருநுவர, திருக்கோவில், | 22/04/2025 | இலக்கம் 187, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு. |
| மன்னார், முல்லைத்தீவு, ஒட்டுச்சுட்டான், புதுக்குடியிருப்பு, வவுனியா, சங்கானை, சாவகச்சேரி, சுன்னாகம், யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, வேலணை, கிளிநொச்சி, அச்சுவெலி, செட்டிக்குளம், மானிப்பாய், முழங்காவில், உரும்பிராய் | 22/04/2025 | இலக்கம் 109, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். |
| கொட்டாஞ்சேனை, மொறட்டுவ, கம்பஹா, கிராண்ட்பாஸ், பிரதான காரியாலயம், களுத்துறை, பாணந்துறை, வெள்ளவத்தை, நீர்கொழும்பு, மத்துகம, எகைந்த, மட்டக்குளிய, ஹோமாகம | 23/04/2025 | இலக்கம் 344, காலி வீதி, கொழும்பு 06. |
| பொகவந்தலாவ, ஹட்டன், மஸ்கெலிய, பூண்டுலோயா, ராகல, தலவாக்கலை, கம்பளை, நாவலப்பிட்டி, புசல்லாவ, வத்தேகம, மாத்தளை, கட்டுகஸ்தோட்டை, நாவுல, திகன, அக்கரப்பத்தன, ஹாவாஎலிய, ஹங்குரன்கெத்த, கொட்டகல, டயகம | 23/04/2025 | இலக்கம் 101, பிரதான வீதி, ஹட்டன். |
| பதுளை, மஹியங்கனை, மொனராகலை, ஹப்புத்தளை, வெலிமட, பசர, பிபில, லுணுகலை | 23/04/2025 | இலக்கம் 344, காலி வீதி, கொழும்பு 06. |
| பேருவளை, காலி, மாத்தறை, அம்பலன்தொட்ட, எல்பிட்டிய, தெனியாய | 23/04/2025 | இலக்கம் 344, காலி வீதி, கொழும்பு 06. |
| சிலாபம், கற்பிட்டி, குருநாகல், புத்தளம், உடப்பு, வென்னப்புவ | 23/04/2025 | இலக்கம் 344, காலி வீதி, கொழும்பு 06. |

குறிப்பு:- ஏல விற்பனைக்கு நுழைவு கட்டணமாக ரூ.5,000.00 அறவிடப்படும்.

ASIA ASSET FINANCE PLC
The Muthoot Group

பிரதி பொது முகாமையாளர் (தங்க கடன்)
இல. 76, பார்க் வீதி, கொழும்பு 02.
துரித அழைப்பு : 0767 888 222 தொ.பே: 0117 699 000
பதிவு இலக்கம்: PB139

# திசைகாட்டி அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகள் இன்று புஸ்வாணமாகிவிட்டன

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றச்சாட்டு

''ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களின்போது மக்கள் மத்தியில் பல எதிர்பார்ப்புகளையும் நம்பிக்கைகளையும் வழங்கிய அரசாங்கம் தமது தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளையும் கொள்கைகளையும் இன்று முழுப் பொய்யாக மாற்றியுள்ளது. நாட்டு மக்கள் தற்போது மிகவும் சிரமத்துடன் வாழ்ந்து வருவதுடன் பொருட்களின் விலைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன. மின்கட்டணத்தை 33% குறைப்போம் என்று இந்த ஆளுந்தரப்பினர் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் கூறினர். மக்கள் எழுப்பிய குரலால் தான் 20% மின்கட்டணமென்றாலும் குறைக்கப்பட்டது. அரசாங்கம் தீர்மானமெடுத்து இதனை நிறைவேற்றவில்லை. மக்களின் கருத்துகளுக்கேற்பவே இது குறைக்கப்பட்டது. எஞ்சிய 13% குறைப்பை இந்த அரசாங்கம் விரைந்து எடுக்க வேண்டும். எரிபொருள் விலைகள் தொடர்பில் அரசாங்கம் இவ்வாறான கொள்கைகளையே பின்பற்றி வருகிறது'' என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிமித்தம் மூதூர் நகரில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

''புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை ஊக்குவிப்பதாகக் கூறினர். ஆனால், இந்த அரசாங்கமும் தற்போது எரிபொருள், அனல், நிலக்கரி மின் நிலைய மாபியாக்களுக்கு அடிபணிந்துள்ளது. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை நாட்டின் எரிசக்திக் கட்டமைப்பிலிருந்து படிப்படியாக அகற்றி, பழைய மாபியாவுக்கு இடம்கொடுக்கும் நிலையை உருவாகியுள்ளது.

மக்களை ஏமாற்றி இந்த அரசாங்கம், விவசாயத்துக்கு பெற்றுத்தருவோமென உறுதியளித்த பக்க பலத்தைக் கூட வழங்காமல், உரமானியமோ, தரமான உரமோ, உத்தரவாத விலையோ இன்னும் பெற்றுக்கொடுத்த பாடில்லை. மனித - காட்டு யானை மோதலுக்கு புதிய தீர்வுகள்



இந்த அரசாங்கத்திடமில்லை. உடைமைகள், உயிர்கள் மற்றும் பயிர்ச்சேதங்களுக்கு இழப்பீடுகள் வழங்கியபாடுமில்லை. இவர்கள் மேடையில் பொய், ஏமாற்று, கேவலமான அரசியலையே செய்து வந்தனர் என்பது இன்று நிரூபணமாகி வருகிறது.

ஐக்கிய மக்கள் சக்தியே முஸ்லிம் மக்களின் கலாசார மற்றும் மத உரிமையான தகனமா அடக்கமா என்ற பிரச்சினை எழுந்தபோது அவர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தது. தற்போதைய அரசாங்கத்தைச் சேர்ந்த அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட இந்த உரிமைக்காகக் குரலெழுப்பவில்லை. ஐக்கிய மக்கள் சக்தி மாத்திரமே இந்த உரிமைக்காகக் குரலெழுப்பிய ஒரே தேசியக் கட்சியாகும். இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீடு பெற்றுத் தருவதற்கு ஜனநாயக ரீதியில் போராடுவோம்.

பலஸ்தீன மக்களின் உரிமைகளுக்காக ஐக்கிய மக்கள் சக்தி அன்றும் இன்றும் நாளையும் என என்றுமே முன்னிற்கும். இந்த மக்கள் ஜனநாயக பலஸ்தீன அரசாங்கத்தின் கீழ் வாழ வேண்டும். ரணசிங்க பிரேமதாச கூட இவ்விரு நாடுகளும் ஒற்றுமையோடு வாழ வேண்டுமென்ற நிலைப்பாட்டில் இருந்தார். அண்மையில், எமது நாட்டில் ஓர் இளைஞன் பலஸ்தீன மக்களின் உரிமைகளை ஆதரித்து ஸ்டிக்கர் ஒட்டியபோது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்து, தடுப்புக் காவலில் வைத்திருக்கும் உத்தரவைக் கூட ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பிறப்பித்தார். இந்த நாட்டு மக்களுக்கு தமது கருத்துகளைப் பேசுவதற்கும் வெளிப்படுத்துவதற்கும் உரிமைகள் காணப்படுகின்றன. இந்த உரிமைகளை யாராலும் தடைசெய்ய முடியாது'' என்றார்.

# நிதியை வைத்து தமிழரை அடிபணியச்செய்ய முயற்சிக்கின்றது தேசிய மக்கள் சக்தி அரசு

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றச்சாட்டு!

(பு.கஜிந்தன்)

நிதியை வைத்து தமிழர் தாயகத்தை அடிபணியச் செய்யும் அடக்குமுறையை மேற்கொள்ள அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு முனைகின்றதெனச் சுட்டிக்காட்டிய யாழ். மாநகர சபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முதல்வர் மற்றும் துணை முதல்வர் வேட்பாளர்கள் உள்ளூராட்சி மன்றங்களின் சட்ட முறைமைகள் தொடர்பில் கூட தெரியாதவர்களாக இன்றைய அரசு இருப்பது வேடிக்கையாக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று (20) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்த அவர்கள் மேலும் கூறுகையில்,

''தனது கட்சியிடம் அதிகாரம் கிடைக்கும் பட்சத்திலே உள்ளூர் அதிகார சபைகளுக்கு நிதி ஒதுக்கப்படுமென்ற தொனிப்பொருளில் வடக்கின் தேர்தல் பிரசார மேடைகளில் கருத்து வெளியிட்டு வருகின்றார்.

இது ஒரு மிகப்பெரிய ஊழல் மோசடியாகும். தேர்தல் ஆணைக்குழுவுக்கு இரண்டாவது கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் கருத்து ஒரு மக்கள் கூட்டத்தின் ஜனநாயகத்தைக் கேள்விக்குறியாக்குகின்றது.

அதுமட்டுமல்லாது, இவர்கள் எத்தகைய பொய்யர்கள் என்பதைக் காட்டுகின்றது. இதை மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். நிதியை வைத்து தமிழர் தாயகத்தை அடிபணியச் செய்யும் அடக்குமுறையை இந்த அரசு செய்ய முயல்கின்றது.

இவர்களது மிரட்டல் அதிகார இலஞ்சத்தை எவரும் ஏற்காது தேசிய மக்கள் சக்தியை தமிழர் தாயகப் பகுதிகளிலிருந்து மக்கள் தூக்கி எறிவது அவசியமாகும். எமக்கு மத்தியின் எந்த நிதியும் வேண்டாம். எமக்கு கேள்வி கேட்க அதிகாரம் இல்லையென்றால், உங்களுக்கு எம்மிடமும் எமது மக்களிடமும் வந்து வாக்கு கேட்பதற்கு என்ன அதிகாரம் இருக்கின்றது?

அந்தவகையில், தமிழரையும் தமிழர் இருப்பையும் இல்லாதொழித்த தேசிய மக்கள் சக்தியை தமிழ் அரசியல் பரப்பில் காலூன்ற விடாது அனைவரும் ஒருமித்து எதிர்கொள்வது அவசியம். இதேவேளை, தமிழ் மக்கள் மத்தியில் இருக்கும் கட்சிகளுக்குள் இருக்கும் முரண்பாடுகளே தேசிய மக்கள் கட்சியின் வடக்கின் வருகைக்கான வாய்ப்பை வழங்கியது. இதை உணர்ந்து தமிழ் மக்கள் இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கின்ற தமிழ் கட்சிகளுக்கு வாக்களிப்பது அவசியமென்றும் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பருத்தித்துறையில் திருடச் சென்ற இளைஞன் தாக்கி மூதாட்டி பலி

(பு.கஜிந்தன்)

பருத்தித்துறை பகுதியில் களவெடுக்கச் சென்ற இளைஞன் தாக்கியதில் 69 வயது மூதாட்டியொருவர் நேற்று (20) பலியாகியுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த வீட்டில் இரண்டு வயோதிபப் பெண்கள் வசித்து வருகின்றனர். இந்நிலையில், ஒருவர் நேற்று (20) காலை தேவாலயத்துக்குச் சென்றுள்ளார். இருவரும் தேவாலயத்துக்கு சென்றிருப்பார்கள் என்ற எண்ணத்தில் அயல் வீட்டு இளைஞன் (வயது 20) திருடுவதற்தாக அங்கு சென்றுள்ளான்.

இந்நிலையில், குறித்த வயோதிபப் பெண் அந்த இளைஞனை கண்டவேளை அந்த இளைஞன் கொட்டன் ஒன்றினால் குறித்த பெண்ணைத் தாக்கி கொலை செய்துள்ளார். தடயவியல் பொலிஸாருடன் இணைந்து விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை பொலிஸார் குறித்த இளைஞனைக் கைதுசெய்துள்ளனர்.

# காணாமல்போன வயோதிபத் தாயை ஏழு நாட்களாக தேடும் உறவினர்கள்

(பு.கஜிந்தன்)

முல்லைத்தீவு, செல்வபுரம் பகுதியில் வயோதிபத் தாயொருவர் ஏழு நாட்களாகக் காணாமல் போயுள்ளார்.

முல்லைத்தீவு செல்வபுரம் பகுதியைச் சேர்ந்த 84 வயதுடைய சலோசியாம்பிள்ளை மேரி புலோமினா என்ற வயோதிபத் தாயே இவ்வாறு காணாமல்போயுள்ளார்.

கடந்த 10.04.2025 முற்பகல் 09.30 மணியளவில் வீட்டை விட்டு வெளியேறியவரை தேடும் பணி ஏழு நாட்களாகத் தொடர்கின்றது.

குறித்த பெண் தொடர்பில் தகவல் தெரிந்தால் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் அல்லது 0775570692, 0770 253210 என்னும் தொலைபேசி இலக்கத்துக்கு அறியத்தருமாறு குடும்பத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.



சம்பவம் தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# திருகோணமலை இந்துக் கல்லூரிக்கெதிரான கால்பந்தாட்டப் போட்டியில் கொழும்பு விவேகானந்தா கல்லூரி வெற்றி







கொழும்பு விவேகானந்தா கல்லூரிக்கும் திருகோணமலை இந்து கல்லூரிக்குமிடையிலான 14 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டியில் விவேகானந்தா கல்லூரி வெற்றி பெற்றது.

திருகோணமலை சாம்பல் தீவு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு இந்து கல்லூரியை ஜி.வினித் வழி நடத்தியதுடன் விவேகானந்தா கல்லூரியை ஸ்ரீ சபரிஷன் வழி நடத்தினார்.

விவேகானந்தா அணி போட்டியின் ஆரம்பம் முதலே சிறப்பாக விளையாடியதுடன் 11: 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

விவேகானந்தா சார்பாக பி.டில்ஷான், ஜி.ஹிமேஸ் ஆகியோர் தலா 04 கோல்களையும் ஜே.விக்னேஸ் 02 கோல்களையும் பி.கவிஷான் ஒரு கோலையும் எடுத்தனர்.

கொழும்பு விவேகானந்தா கால்பந்தாட்ட அணியின் பயிற்றுனர்களாக எம்.கண்ணகுமார், ஏ.ஜோன்சன் ஆகியோரும் திருகோணமலை இந்துக் கல்லூரி பயிற்றுனராக அ.அகிலனும் செயற்பட்டனர்.

# நாவலடியில் அன்னை பூபதியின் நினைவுதினம் அனுஷ்டிப்பு!







(கல்லடி செய்தியாளர்)

உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்த அன்னை பூபதியின் 37ஆவது நினைவுதினம் நேற்று முன்தினம் (19) மாலை நாவலடி அன்னைபூபதி நினைவு இல்லத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது அன்னையின் சமாதிக்கு மலர்மாலை சாத்தி, அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்தோடு, அன்னை பூபதியின் நினைவாகத் தெரிவு செய்யப் பட்டோருக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், இயேசு சபையைச் சேர்ந்த அருட்பணி த.ஜீவராஜ் அடிகளார், கிளிநொச்சியைச் சேர்ந்த சமூக சேவையாளரும் சிகரம் இலவசக் கல்வி நிலையத் தலைவருமான கலா மற்றும் முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவி மேரி நிர்மலா உட்பட அன்னையின் குடும்ப உறவுகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.







2025ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோகிக்கும் பணியில் தபால் ஊழியர்கள் நேற்று (20) முதல் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் வாக்காளர் அட்டை விநியோகிக்கப்பட்டபோது... (பு.கஜிந்தன்)


# Now you can subscribe the following Newspapers

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Year | | 261 | 10440.00 |
| தமிழன் | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Year | | 52 | 6760.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Year | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Year | | 52 | 9360.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address : - The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE

Hotline :- 076 136 7623

Tel No: - 0112 127 209



இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று பிரதேச சபையின் கொம்மாதுறை வட்டாரத்தில் போட்டியிடும் வேட்பாளரின் மக்கள் சந்திப்பு நேற்று ஞாயிற்றுக்கிழமை (20) ஒருமுழச்சோலையில் நடைபெற்றது. இம்மக்கள் சந்திப்பில் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், இ.சிறிநாத் உட்படப் பலர் கலந்துகொண்டனர். தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சிக்கு வாக்களிப்பதற்கான அவசியம் தொடர்பாக இச்சந்திப்பில் தெளிவூட்டப்பட்டது. (செங்கலடி செய்தியாளர்)

# ஆசியாவின் ஆச்சரியமிக்க நகரமாக காத்தான்குடி மாற்றப்படும்

## ஹிஸ்புல்லாஹ் எம்.பி. தெரிவிப்பு



''காத்தான்குடி நகர சபைக்கு அதிக பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்டு முழுமையான அதிகாரத்தைப் பெற்று ஆட்சி யமைப்பதற்குரிய அனைத்து வியூகங்களும் வகுக்கப்பட்டுள்ளன. ஆசியாவின் ஆச்சரியமிக்க நகரமாக காத்தான்குடி நகரம் மாற்றப்படும். அதற்கான அனைத்துத் திட்டங்களும் எம்மிடமுள்ளன. மிக விரைவில் அதனை நிறைவேற்றி பிரபல்யமிக்க சுற்றுலா நகரமாக மாற்றப்படும்'' - என முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் காத்தான்குடி நகர சபையில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் மு.கா. உயர்பீட உறுப்பினர் ராஸிக் தலைமையில் காத்தான்குடி அல்-அக்ஸா சதுக்கத்தில் சனிக்கிழமை(19) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

''கடந்த பாராளுமன்றத் தேர்தலில் எதையெல்லாம் நாங்கள் பேசினோமோ அவற்றையெல்லாம் நிறைவேற்ற நாங்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். எம்மால் முடிந்த சிலவற்றைச் செய்திருக்கிறோம். காத்தான்குடி நகரசபைக்குட்பட்ட பன்னிரெண்டு கிலோமீற்றர் வீதியை காப்பட் வீதியாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது இன்னும் இரண்டு மாதங்களுக்குள் நிறைவடையும்.

அதேபோன்று, காத்தான்குடி நகரசபைக்குட்பட்ட அனைத்து வீதிகளுக்கும் காப்பட் இடும் பணியை எதிர்வரும் டிசம்பர் மாதமளவில் நிறைவு செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கி றோம். எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் காத்தான்குடி நகரசபையை வெல்வதற்கு எந்தச் சவாலும் எமக்கில்லை. பத்து வட்டாரங்களையும் மிக இலகுவாக வெல்வோம். எம்மோடு மேலும் சில கட்சிகள் இணைவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது'' - என்றார்.

இதன்போது, கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், பிரதேச மத்திய குழு உறுப்பினர்கள், காத்தான்குடி நகரசபை வேட்பாளர்கள், கட்சி முக்கியஸ்தர்கள், ஊர் முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



உயிர்த்த ஞாயிறு தின வழிபாடு வாழைச்சேனை, மெதடிஸ்த ஆலயத்தில் முகாமைக் குரு அருட்கலாநிதி கே.எஸ்.நிசாந்தன் தலைமையில் நேற்று(20) காலை நடைபெற்றது. பொலிஸாரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் வழிபாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன. (வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்)



மட்டக்களப்பில் கிறிஸ்தவ தேவாலயங்களில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் உயிர்த்த ஞாயிறு தின விசேட ஆராதனைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை (20) காலை இடம்பெற்றன. இதன்போது பொலிஸார், இராணுவத்தினர் இணைந்து பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். (கனகராசா சரவணன்)

# மோட்டார் சைக்கிள் - பஸ் மோதி குடும்பஸ்தரொருவர் உயிரிழப்பு

(மீராவோடை செய்தியாளர்)

மோட்டார் சைக்கிளுடன் பஸ் மோதியதில் இளம் குடும்பஸ்தரொருவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம்(19) வாகரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாங்கேணி புல்லாவி சந்தியில் இடம்பெற்றுள்ளது. வாழைச்சேனை பகுதியிலிருந்து மீன் வியாபாரத்துக்காக மாங்கேணி பகுதிக்குச் சென்ற நபர் ஊருக்குத் திரும்பும்போதே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளின் மீது எதிரே வந்த பஸ் மோதியதில் குறித்த நபர் விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளமை விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது.

இவ்விபத்தில் உயிரிழந்தவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையான வாழைச்சேனையைச் சேர்ந்த 40 வயதுடைய சலீம் றபாய்தீன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பாசிக்குடாவில் சுற்றுலாப் பயணிகளின் மலசலகூட தேவையில் அசௌகரியம்

## கவனம் செலுத்துமாறு பிரதேச சபையினரிடம் வேண்டுகோள்



(மீராவோடை செய்தியாளர்)

கிழக்கு மாகாணத்தில் பிரசித்தி பெற்ற சுற்றுலாத்தலமான மட்டக்களப்பு - பாசிக்குடா கடற்கரைக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதை அவதானிக்க முடிகிறது.

சித்திரைப் புத்தாண்டு விடுமுறையை முன்னிட்டு உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பாசிக்குடா கடற்கரையை நோக்கிப் படையெடுக்கின்றனர்.

கடற்கரைக்கு குடும்பத்துடன் வரும் பயணிகள் தாங்கள் மகிழ்ச்சியான முறையில் பொழுதைக் கழிக்க கடலில் நீராடுவதோடு, விளையாட்டுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், கடற்கரைப் பகுதியில் இரண்டு மலசலகூடங்கள் மாத்திரமே காணப்படுவதால் பெருந்திரளாக கடற்கரைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் தங்களுடைய இயற்கைத் தேவைகளை நிறைவேற்ற பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் வாழைச்சேனை பிரதேச சபை நிர்வாகத்தினர் கவனஞ்செலுத்தி அடிப்படை வசதிகளை நிறைவேற்றித் தருமாறு சுற்றுலாப் பயணிகள் வேண்டிக்கொள்கின்றனர்.

# கிழக்கில் தொடரும் உஷ்ணமான காலநிலை: பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு



(மட்டக்களப்பு செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில நாட்களாகத் தொடரும் உஷ்ணமான கால நிலையால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது. நகரில் முக்கிய தேவைகளுக்காக வரும் மக்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதிக உஷ்ணம் காரணமாக வயோதிபர்கள், நோயாளிகள், பெண்கள், சிறுவர்கள், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் மர நிழல்களில் ஒதுங்கியிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தல்களுக்கமைய பொதுமக்களை நண்பகல் வேளைகளில் வெளியில் நடமாட வேண்டாமெனத் தெரிவித்திருந்தபோதும் அதிகமான மக்கள் நகரில் தங்களது தேவைகள் நிமித்தம் நடமாடுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

தற்போது மாவட்டத்தில் நிலவும் அதிக உஷ்ணமான காலநிலையால் விவசாய நடவடிக்கைகளும் பாதிப்படைந்துள்ளன. இதேவேளை, மாவட்டத்தில் பயன் தரு வாழை, மா, தெங்கு செய்கைகளும் அதிக உஷ்ணம் காரணமாகப் பாதிப்படைந்துள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தென்னை மரங்களின் இலைகள் கருகுவதுடன் அதன் விளைச்சலும் பாதிப்படைந்துள்ளது. இதனால் தேங்காயின் விலைகளும் அதிகரித்துள்ளன.

# சுவரொட்டிகளை ஒட்டிய மூவர் ஏறாவூரில் கைது

(ஏறாவூர் செய்தியாளர்)

தேர்தல் சட்ட விதிகளை மீறி மட்டக்களப்பு - ஏறாவூர்ப் பிரதேசத்தில் சுவரொட்டிகளை ஒட்டிய குற்றச்சாட்டின் பேரில் மூவர் சனிக்கிழமை (19) மாலை ஏறாவூர்ப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்களை ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் ஏறாவூர் எல்லை வீதி மற்றும் லக்கி வீதியைச் சேர்ந்த 44, 50 மற்றும் 52 வயதுடையவர்கள். குறித்த சந்தேக நபர்களிடமிருந்து ஒரு தொகுதி சுவரொட்டிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவற்றில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி கட்சியின் சின்னம் மற்றும் ஏறாவூர் நகரசபைக்கு போட்டியிடும் எல்லை நகர் வட்டார வேட்பாளரின் பெயர், படங்கள் அச்சிடப்பட்டிருந்தன. மாலை வேளையில் வீதியோர சுவர்களில் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருக்கும்போது முச்சக்கரவண்டியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் குழுவினர் இவர்களைக் கைதுசெய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக ஏறாவூர்ப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



சம்மாந்துறை செனவட்டை பிரதேசத்தில் மின்னல் தாக்கி உயிரிழந்தோரின் மரணச் சடங்குக்கான கொடுப்பனவு ஐம்பதாயிரம் ரூபா சனிக்கிழமை(19) வழங்கிவைக்கப்பட்டது. சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபாவின் முயற்சியால் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஜெகராஜனால் இக்கொடுப்பனவு வழங்கிவைக்கப்பட்டது. (பாறுக் ஷிஹான்)



ஸ்கை தமிழின் ஐந்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 'இதயம்' எனும் நாமம் தாங்கி, சமூக சேவைகளுக்கான புதிய திட்டத்தை ஆரம்பித்துள்ளது. ஸ்கை தமிழின் பணிப்பாளர் ஜே.எம்.பாஸித்தின் வழிகாட்டலில் இதயம் சமூகசேவைத் திட்டத்தின் தலைவர்/ ஊடகவியலாளர் எம்.பஹுத் ஜுனைட் தலைமையில் ஸ்கை தமிழ் சமூக சேவைக் குழுவினர் சனிக்கிழமை (19) ஏறாவூர் புற்றுநோயாளர் பராமரிப்பு நிலையத்துக்கு கள விஜயம் மேற்கொண்டு, சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களின் நிலைகள் தொடர்பில் கலந்துரையாடியதுடன் அவர்களுக்கான பகல் உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய அன்பளிப்புப் பொதியும் வழங்கியதனூடாக இச்சமூகப் பணியானது ஆரம்பித்து வைக்கப்பட்டது. (காத்தான்குடி செய்தியாளர்)

# அன்னை பூபதியின் 37ஆவது நினைவேந்தல் அனுஷ்டிப்பு



(கனகராசா சரவணன்)

தியாக தீபம் அன்னை பூபதியின் 37ஆவது நினைவேந்தல் மட்டக்களப்பு, ஆயித்தியமலை பிரதேசத்தில் அன்னையின் திருவுருவப் படத்துக்கு சுடரேற்றி மௌன அஞ்சலி செலுத்தி உணர்வு பூர்வமாக சனிக்கிழமை (19) அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வவுணதீவு பிரதேச சபை வேட்பாளர் செல்வகுமார் தலைமையில் ஆயித்தியமலை பிரதேசத்திலுள்ள பிரத்தியேகமான இடத்தில் இடம்பெற்ற இந்நினைவேந்தலில் கட்சியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ், மாவட்ட அமைப்பாளர் குகநாதன், வெல்லாவெளி பிரதேச அமைப்பாளர் குமாரசிங்கம் மற்றும் வவுணதீவு பிரதேசசபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பில் இடம்பெற்ற இஞ்சி அறுவடை விழா



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் ஏற்றுமதி விவசாயப் பயிரான இஞ்சி அறுவடை விழா மட்டக்களப்பில் இடம்பெற்றது.

நாட்டுக்கு அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் ஏற்றுமதி விவசாயப் பயிர்ச் செய்கையை அறிமுகம் செய்யும் நிகழ்வு நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் ஏற்றுமதி விவசாயத் திணைக்கள மட்டக்களப்பு மாவட்ட விரிவாக்கல் உத்தியோகத்தர் திருமதி நர்த்தனா குகதாசனின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்டத்துக்கான ஏற்றுமதிப் பயிர்களின் செய்கையை அறிமுகம் செய்யும் நிகழ்வு கிரான் பிரதேச செயலகப் பிரிவில் இடம்பெற்றது.

கிரான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கோரளங்கேணி பகுதியில் செய்கை பண்ணப்பட்ட இஞ்சி அறுவடை விழாவுக்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் கலந்துகொண்டதுடன் ஏற்றுமதிப் பயிரான இஞ்சி அறுவடையையும் ஆரம்பித்து வைத்தார்.

குறித்த பண்ணையில் நடப்பட்டிருந்த ஏற்றுமதிப் பயிரான இஞ்சி அதிகமாக விளைந்திருந்ததுடன், அடுத்த வருடம் ஏற்றுமதி விவசாயத் திணைக்கள மட்டக்களப்பு மாவட்ட விரிவாக்கல் கிளையால் மட்டக்களப்பில் நடுகை பண்ணுவதற்கு உகந்த பயிர்கள் என கமுகு, கொறுக்காய், இஞ்சி, மிளகு, மஞ்சள் போன்ற பயிர் வகைகள் இனங்காணப்பட்டுள்ள நிலையில், அடுத்த வருடம் கோப்பி பயிர்ச் செய்கை தொடர்பான அறிமுகமும் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறை ஹிஜ்ரா ஜும்ஆ மஸ்ஜித்துக்கு சோலார் பொருத்தல்



(மாளிகைக்காடு செய்தியாளர்)

நாட்டின் பொருளாதார நெருக்கடியில் சிக்கி பல்வேறு சமூகக் கட்டமைப்புகளும் சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ளமைக்கு நிவாரணமளிக்கும் வகையில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் டீ- 100 திட்டத்தின் கீழ் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறார்.

அதன் ஓர் அங்கமாக சம்மாந்துறை பத்ர் ஹிஜ்ரா ஜும்ஆ மஸ்ஜிதுக்கு சோலார் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

சம்மாந்துறை பத்ர் ஹிஜ்ரா ஜும்ஆ மஸ்ஜிதின் நீண்டநாள் பிரச்சினையாக இருந்து வந்த பெருந்தொகை மின்சாரக் கட்டணப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் விதமாக குறித்த திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.50 இலட்சம் பெறுமதியான சோலார் சிஸ்டம் பொருத்தப்பட்டுள்ளது.

# ட்ரம்ப்பின் வரிவிதிப்பு குறித்து பேசாமல் ராஜபக்ஷவினரை சாடுகிறார் ஜனாதிபதி அநுர

## நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவிப்பு

(அநுராதபுரம் நிருபர்)



''உலகின் அனைத்து தலைவர்களும் அமெரிக்க ஜனாதிபதியின் வரிக் கொள்கையின் தாக்கம் குறித்துப் பேசிக்கொண்டிருக்கும் வேளையில் எமது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மாத்திரம் ஒவ்வொரு மேடைகளிலும் ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு ஏசித் திரிகின்றார்'' - என பாராளுமன்ற உறுப்பினரும் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அநுராதபுரம் பகுதியில் நேற்று முன்தினம் (19) மாலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

''ராஜபக்ஷவினருக்கு ஏசித் திரிவதால் ஜனாதிபதி ட்ரம்ப் வரியை நீக்கப்போவதில்லை. அதனை அவர் விளங்கிக்கொள்ள வேண்டும். அதற்கு வேலைத்திட்டமொன்றுடனான நோக்குடன் செல்லவேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, ஹர்ஷ டி சில்வா, டீ.வீ.ஷானக்க ஆகியோர் ஆலோசனை அடங்கிய வேலைத்திட்டமொன்றை வழங்கியுள்ளனர். அதையாவது எடுத்துக்கொண்டு ஒரு வேலைத்திட்டத்தைச் செய்யவேண்டும். அவ்வாறில்லாமல் கடிதமொன்றை அனுப்பி தபால்மூலம் பதிலொன்று வரும் வரையில் பார்த்துக்கொண்டிருந்தால் எமது நாடு இந்தச் சவால்களுக்கு முகம்கொடுக்க முடியாமல் போகும். அரசாங்கம் இதனைத் தெளிவாகப் புரிந்துகொண்டு பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

இந்த நாட்டு மக்களுக்கு பொய்யான வாக்குறுதிகளை வழங்கி தேசிய மக்கள் சக்தியினர் ஆட்சியை அமைத்தனர். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அவர்களால் நிறைவேற்ற முடியாத நிலை இன்று ஏற்பட்டுள்ளது. மீண்டும் பொய் கூறிக்கொண்டே அவர்கள் ஆட்சியை நகர்த்திக்கொண்டு செல்ல முயற்சிக்கின்றனர். இன்று அது இந்த நாட்டு மக்களுக்கு நன்றாக விளங்கியுள்ளது. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின்போது நல்லாட்சி அரசாங்கத்தில் உயர் பதவி வகித்தவர்களே தற்போதைய அரசாங்கத்தில் முக்கிய பதவிகளை வகிக்கின்றனர்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கூறுகின்றார் தமக்கான அதிகாரம் வராமல் வேறு தரப்பினருக்கு அதிகாரம் செல்லும் பட்சத்தில் அச் சபைகளுக்கு நிதி வழங்க மாட்டோமென்று. 2018ஆம் ஆண்டு எந்த அதிகாரமும் இல்லாத நிலையில் தான் பொதுஜன பெரமுன வெற்றியீட்டியது. அன்று நாங்கள் நாட்டுக்கு வேலைசெய்து காட்டினோம் என்ற விடயத்தைக் கூற விரும்புகிறேன். எமது கட்சி நாட்டுக்கு வேலை செய்த கட்சி. ஆகையால் இந்த நாட்டு மக்கள் எமக்கு மீண்டும் அதிகாரத்தை வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு'' என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

# வவுனியா-மகாறம்பைக் குளத்தில் தமிழரசுக் கட்சியின் தேர்தல் அலுவலகம் திறப்பு!





இலங்கை தமிழரசுக் கட்சியின் பிரதேச தேர்தல் காரியாலயம் வவுனியா மகாறம்பைக் குளம் பிரதான வீதியில் நேற்று (20) திறக்கப்பட்டது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான பிரசாரப் பணிகள் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்குட்பட்ட மகாறம்பைக்குளம் வட்டாரத்தில் தமிழரசுக் கட்சி சார்பாக சி.சந்திரசேகரம் நேரடி வேட்பாளராகப் போட்டியிடு +வதுடன், பா.ஆனந், ரா.நித்தியா ஆகியோர் பட்டியல் வேட்பாளர்களாகவும் போட்டியிடுகின்றனர்.

அவர்களது பிரதேச தேர்தல் அலுவலகம் மகாறம்பைக்குளம் பிரதான வீதியில் திறந்துவைக்கப்பட்டது. இதன்போது வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம், கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் வேட்பாளர்கள் ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர்.

# தையிட்டி விகாரையின் கட்டுமானத்துக்கு முக்கிய காரணமாக இருந்தவர்கள் தேசிய மக்கள் சக்தியினரே

## கஜேந்திரகுமார் எம்.பி. சாடல்

(பு.கஜிந்தன்)

தையிட்டி விகாரை விவகாரத்தில் அது கட்டப்பட்ட விதம் சட்டவிரோதம் தான் என்ற நிலைப்பாட்டில் எந்தவொரு தமிழ் அரசியல் கட்சியிடமும் மாற்றுக் கருத்து இருக்கப்போவதில்லையென சுட்டிக்காட்டிய தமிழ்த் தேசியக் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தையிட்டி விகாரையின் கட்டுமானத்துக்கு முக்கிய காரணமாக இருந்தவர்களே இந்தத் தேசிய மக்கள் சக்தி என்ற மக்கள் விடுதலை முன்னணியினர் தான் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் வெள்ளிக்கிழமை (18) ஊடக சந்திப்பொன்றை முன்னெடுத்த அவர் இவ்வாறு கூறியிருந்ததுடன் அது தொடர்பில் மேலும் கூறுகையில்,

''இனவாதத்துக்கு இடமில்லை என்று கூறும் அநுர அரசே தையிட்டி விகாரையின் கட்டுமானத்துக்கு முக்கிய காரணமாக இருந்தனர். இவர்களே அன்று இந்த திஸ்ஸ விகாரையின் கட்டுமானம் ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் குறித்த பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்தபோது, விகாரையை அமைக்கும் நடவடிக்கைக்கு யாழ்ப்பாணத் தமிழர்கள் மதவாதம் பேசுவதாகக் கூறி சிங்கள மக்களைத் திசைதிருப்பி விகாரையை கட்டிமுடிக்கச் செய்திருந்தனர்.

ஆனால், இன்று குத்துக்கரணம் அடித்து மக்களை ஏமாற்றி எமது மக்களின் நலன்களை முன்னிறுத்தி போராடும் தமிழ் அரசியல் கட்சிகள் மீது குறிப்பாக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மீது குற்றச்சாட்டைச் சுமத்தி அரசியல் செய்கின்றனர். இனவாதத்தைத் தூண்டும் இந்தத் தேசிய மக்கள் சக்தி, தமிழ்க் கட்சிகள் மீது பொய்க் குற்றச்சாட்டுகளைக் கூறி அவர்களது உச்சபட்ச இனவாதத்தின் வெளிப்பாட்டைக் காட்டுகின்றனர்.

முன்னைய அரச தலைவரான கோட்டாவுக்கு அவரது உண்மை முகத்தைக் காட்ட இரண்டு வருடங்கள் தேவைப்பட்டன. ஆனால், இந்த ஜே.வி.பியின் உண்மையான முகம் 06 மாதங்களுக்குள் வெளிப்பட்டுவிட்டது.

குறிப்பாக, முன்னையவர்கள் இனவாதிகள். அதை அவர்கள் வெளிப்படையாகவே காட்டினர். ஆனால், இவர்கள் அதைவிட மோசமானவர்கள்.



மக்களை நம்பவைத்து தம்வசப்படுத்தி கழுத்தறுக்க முயற்சிக்கின்றனர்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசார மேடைகளில் ஜனாதிபதியின் பிரசாரப் பேச்சுகள் தமிழ் மக்களின் இருப்பை சூட்சுமமாக இல்லாதொழிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை உள்ளடக்கியதாகவே முன்னெடுப்பதாக உள்ளது.

இது அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசின் அச்சுறுத்தும் அரசியல் போக்காகவே இருக்கின்றது.

மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக பல வாக்குறுதிகளை அள்ளி வழங்கிய அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினர் அந்த வாக்குறுதிகளுள் ஒன்றைக்கூட நிறைவேற்றாது மீண்டும் புதிய பல வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்றனர்.

இது தமிழ் மக்களின் வாக்குகளைச் சூறையாடும் முயற்சியாக இருக்கின்றதே தவிர தமிழ் மக்களின் நலன்களுக்கானதாக ஒருபோதும் இருக்கப்போவதில்லை. இதை எமது மக்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். அத்துடன், இதன் வெளிப்பாட்டை உள்ளூராட்சித் தேர்தலிலும் வெளிப்படுத்த வேண்டும்.

அந்தவகையில், தமக்கு வாக்களித்தால்தான் பிரதேச சபைகளுக்கு நிதி விடுவிக்கப்படும் என்ற ஜனாதிபதியின் கருத்தானது ஜனநாயக விரோதத்துக்கு இதைவிட வேறொரு உதாரணம் வேண்டுமா?'' - என்றும் தெரிவித்தார்.

# 16 வருடங்களுக்குப் பின்னர் புத்தபெருமானின் புனித தந்த தாதுவை தரிசிக்கும் அரிய வாய்ப்பு

## 03 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் வருகை







(எம்.ஏ.அமீனுல்லா)

நாட்டு மக்களுக்கு 16 வருடங்களின் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை (18) புத்த பெருமானின் புனித தந்தத்தை தரிசிக்கும் அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

தலதா கண்காட்சியின் ஆரம்பநாளான கடந்த வெள்ளிக்கிழமை(18) சுமார் ஒரு இலட்சம் பக்தர்கள் வழிபாட்டில் கலந்துகொண்டிருந்த போதிலும் மூன்றாவது நாளான நேற்று (20) வரைக்கும் சுமார் 03 இலட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் வழிபாட்டில் கலந்து கொண்டுள்ளனர் என மத்திய மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுதத் மாசிங்க தெரிவித்தார்.

ஸ்ரீ தலதா மாளிகை கண்காட்சி ஆரம்பமாவதற்கு 48 மணி நேரத்துக்கும் முன்னரே பக்தர்கள் கண்டிக்கு வந்து வரிசையில் நின்றுகொண்டிருந்தனர். இந்த ஆண்டு யாத்திரையில் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் கலந்துகொள்வார்கள் என்பதாக எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் பங்கேற்புடன் ஸ்ரீ தலதா கண்காட்சி நேற்று முன்தினம் பிற்பகல் ஆரம்பமானதுடன், பொதுமக்கள் பிரதிநிதிகள், வெளிநாட்டுத் தூதுவர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் குழுவினரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பிற்பகல் 2.45 மணிக்கு தந்தத்தை தரிசனம் செய்யவும் வழிபடவும் பொதுமக்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. அதற்குள் நாடு முழுவதிலுமிருந்து தமது இருப்பிடங்களை ஏலவே தமதாக்கிக்கொள்ளும் வகையில் பக்தர்கள் இடம் ஒதுக்கியதால் வரிசை ஐந்து கிலோமீற்றருக்கும் அதிகமாக நீண்டிருந்தது.

சங்கராஜ மாவத்தை வழியாக கண்டி ரது போக்கிலிருந்து வாவியைச் சுற்றி ஒரு வரிசையும் நீரூற்றுக்கு முன்னால் உள்ள வாவிப்பகுதியை ஒட்டி கண்டி அவன்கல உணவகத்திலிருந்து ஒரு வரிசையும் மற்றும் கண்டி டி.எஸ்.சேனநாயக்க வீதி, கொழும்பு வீதி மற்றும் தலதா வீதி ஆகிய இடங்களில் பக்தர்களுக்காக மற்றொரு வரிசையும் அமைக்கப்பட்டுள்ளது.

மூன்று வரிசைகளிலும் வரும் பக்தர்கள், பிரதான முற்றத்தை வந்தடைந்த பின், ஒரு வரிசை வழியாக நடந்து ஸ்ரீ தலதா மாளிகைக்குள் நுழைய வேண்டும். மேல் மட்டத்தில் நுழைந்த பிறகு அவர்கள் தந்ததாதுவை வழிபட மேலும் மூன்று வரிசைகள் வழியாக நடக்க வேண்டும்.

அதிகளவான மக்கள் ஒரே நேரத்தில் தந்தத்தாதுவை வழிபடுவதற்கு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மல்வத்து மற்றும் அஸ்கிரிய மகா விகாரையின் இரண்டு மகாநாயக்க தேரர்கள் மற்றும் தியவதன நிலமே ஆகியோரின் நோக்கம் நிமிடத்துக்கு 8-10 பேர் வரை தலதா வழிபாடு செய்ய அனுமதிப்பதாக மத்திய மாகாணப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்திருந்தார்.

இதன்படி, ஸ்ரீ தலதா கண்காட்சி நடைபெறவுள்ள 10 நாட்களின்போது ஒன்றரை முதல் இரண்டு மில்லியன் மக்கள் தலதா கண்காட்சியை வழிபடுவதற்கான வாய்ப்பை வழங்கமுடியுமென அவர் குறிப்பிட்டிருந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை(18) பிற்பகல் 2.45 மணியளவில் பொதுமக்களுக்கு தந்தத்தை தரிசனம் செய்யும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாகவும் எஞ்சியுள்ள ஒன்பது நாட்களும் தினமும் மதியம் 12.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரை பொதுமக்கள் சென்று வழிபட அனுமதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் ஸ்ரீ தலதா மாளிகையின் தியவதன நிலமே பிரதீப் நிலங்க தேல தெரிவித்தார்.

இரவு முழுவதும் வரிசையில் நின்று தலதா தந்தத்தை வழிபடும் பக்தர்களுக்காக ஸ்ரீ தலதா மாளிகை சிறப்பு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்துள்ளது. தினமும் 30,000 முதல் 35,000 பேருக்கு இரவு உணவு வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், 330 தனிநபர்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்கள் அன்னதானங்களை வழங்குவதற்காக கண்டி மாநகர சுகாதார திணைக்களத்தில் பதிவுசெய்துள்ளனர்.

இம்முறை தலதா மாளிகை வழிபாட்டுக்கு விசேட அனுமதிப்பத்திரம் வழங்கப்பட மாட்டாதெனவும் மகாசங்கத்தினர் மற்றும் விசேட தேவையுடையோருக்கு மாத்திரம் பிரத்தியேக அனுமதிக்கான வசதிகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ தலதா மாளிகை வழிபாட்டுக்காக கண்டிக்கு வருகை தரும் பக்தர்களின் வசதிக்காக கண்டி நகர எல்லைக்குள் மற்றும் வெளியே 25 வாகனத் தரிப்பிடங்களும் கண்டி புறநகர்ப் பகுதியில் 12 வாகனத் தரிப்பிடங்களும் வெளியில் 13 வாகனத் தரிப்பிடங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தலதா மாளிகை வழிபாட்டுக்காக பக்தர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் நகருக்குள் அனுமதிக்கப்படமாட்டாதெனவும் கடுகஸ்தோட்டை, தென்னகும்புர, பேராதனை, பொல்கொல்ல, மஹாயாவ, பல்லேகல, குருதெனிய உள்ளிட்ட பல இடங்களில் அந்த வாகனங்களை நிறுத்தி பஸ்களில் பக்தர்களை நகருக்கு அழைத்து வரத் திட்டமிடப்பட்டுள்ளது.

அன்றாடத் தேவைகளுக்காக கண்டிக்கு வரும் மக்கள் நகருக்குள் வாகனங்களை நிறுத்த அனுமதிக்கப்படாததால், அவர்களுக்காக வெவெல்பிட்டிய மைதானம், சஹஸ் உயன வாகனத் தரிப்பிடம், கெட்டம்பே மஹாநாம மைதானம், மஹய்யாவ பொது மயானத்துக்கு முன்பாக உள்ள வீதி, கண்டி மாநகரசபை வாகனத் தரிப்பிடம் உள்ளிட்ட 12 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நகருக்குள் நுழையும் அனைத்து வீதிகளிலும் தடுப்புகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தலதா மாளிகை மற்றும் பக்தர்களின் பாதுகாப்புக்காக 10,000 பொலிஸார் மற்றும் முப்படை வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டிருப்பதுடன் தலதா மாளிகை வளாகத்தில் மாத்திரம் சிவில் அதிகாரிகளுடன் 1,060 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொலிஸ் அதிகாரிகள் சிறப்புப் பணிக்கு வருவதுபோல, இதுபோன்ற சமயங்களில் கொள்ளைக்காரர்களும் ஊருக்குள் - நகரத்துக்குள் வருவது அனுபவத்தில் தெரியுமென்றும் இது தொடர்பாக பொலிஸ் நிலைய அளவில் தகவல் சேகரிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் கூறினார்.

ஸ்ரீ தலதா மாளிகை யாத்திரைக்காக கண்டிக்கு வருகை தரும் பக்தர்களின் வசதிக்காக பொலிஸ் தகவல் தொழில்நுட்பப் பிரிவு உத்தியோகபூர்வ பொலிஸ் இணையதளத்தினூடாக பல சேவைகளை நடைமுறைப்படுத்தியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார். கண்டிக்கு வருவதற்கு முன் அதை ஆலோசித்து புரிந்துணர்வைப் பெறுவதன் மூலம் பக்தர்கள் பல அசௌகரியங்களைத் தவிர்க்க முடியும்.

இணையதளத்தில் பிரவேசித்ததன் பின்னர், 'சிறி தலதா வந்தனாவ' என்ற ஐகான் மூலம் புனித தலதா யாத்திரை தொடர்பான அனைத்து தகவல்களையும் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தலதா மாளிகை புனித யாத்திரைக்காக கண்டிக்கு வருகை தரும் மக்களுக்கு வழங்கப்படும் ஆலோசனைகள் மற்றும் சேவைகள் குறித்த தகவல்களும் வாகனத் தரிப்பிடங்களில் உள்ள வாகனத் தரிப்பிடங்கள் குறித்த தகவல்களும் இதன் மூலம் வழங்கப்படுமென அவர் வலியுறுத்தினார்.

மேலும் புனித தந்தத்தாதுவை வழிபட கண்டிக்கு வரும் பக்தர்களுக்கு போதுமான போக்குவரத்து, சுகாதாரம், பாதுகாப்பு, உணவு பரிமாறல், வீதிக்கட்டமைப்பு ஆகிய பல்வேறு அடிப்படை வசதிகள் குறித்த துறைசார்ந்த அமைப்புகளால் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

தலதா கண்காட்சியின் ஆரம்ப நாளான வெள்ளிக்கிழமை சுமார் ஒரு இலட்சம் பக்தர்கள் வழிபாட்டில் கலந்துகொண்டதாகப் பாதுகாப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

# வல்வெட்டித்துறை நகராட்சியின் தமிழ் தேசியப் பேரவை வேட்பாளர்கள் அறிமுகம்



(பு.கஜிந்தன்)

வல்வெட்டித்துறை நகரசபைக்கான தேர்தலில் போட்டியிடுகின்ற தமிழ்த் தேசியப் பேரவையின் வேட்பாளர்களை அறிமுகம் செய்துவைக்கும் கூட்டம் நேற்று முன்தினம் (19) வல்வெட்டித்துறை நகராட்சி மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கட்சியின் வல்வை இணைப்பாளர் வி.கவிச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத் தலைவர் பொ.ஐங்கரநேசன், தமிழ்த்தேசியக் கட்சித் தலைவர் என்.ஸ்ரீகாந்தா, பொதுச் செயலாளரும் வல்வை நகரசபையின் முதன்மை வேட்பாளருமான எம்.கே. சிவாஜிலிங்கம், சமூக/அரசியற் செயற்பாட்டாளர் க.அருந்தவபாலன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஸ், யாழ். மாவட்ட அமைப்பாளர் செ.பொன் குணரத்தினம் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் சைக்கிள் சின்னத்தில் கடந்த தேர்தல்களில் போட்டியிட்டு வந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இப்போது தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம், தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகத் தமிழரசுக் கட்சி ஆகியவற்றையும் இணைத்துத் தமிழ்த் தேசியப் பேரவை என்னும் கூட்டணியாக உருப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழரசுக் கட்சியின் ஒட்டுசுட்டான் பிரதேச வேட்பாளர்களுடன் ரவிகரன் எம்.பி. சந்திப்பு



(விஜயரத்தினம் சரவணன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஒட்டுசுட்டான் பிரதேச கிளைக்குட்பட்ட உள்ளூர் அதிகாரசபை வேட்பாளர்களுடன் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சந்தித்து கலந்துரையாடலொன்றை நடத்தியுள்ளார். இக்கலந்துரையாடலில் உள்ளூர் அதிகாரசபைத் தேர்தலை இலங்கைத் தமிழரசுக்கட்சி ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் எவ்வாறு எதிர்கொள்வதென்பது தொடர்பில் பேசப்பட்டதுடன், ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் காணப்படும் ஐந்து உள்ளூர் அதிகாரசபை வட்டாரங்களையும் இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றுவதற்கான ஆலோசனைகளும் இதன்போது வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்டன.

# வெற்றிகரமாக நிறைவடைந்த ரீதிங் ஹெல்தி நீர் விளையாட்டுப் போட்டியான AIA எக்வாஃபெ(f)ஸ்ட் 2025!




AIA இன்சூரன்ஸ் வங்கியுடன் இணைந்து இலங்கையின் மிகப்பெரிய மற்றும் மிகவும் உற்சாகமான நீர் விளையாட்டு விழாவான AIA எக்வாஃபெ(f)ஸ்ட் 2025 ஐ சமீபத்தில் கொழும்பின் காலி முகத்திடலில் நடத்தியிருந்தது. கொழும்பின் அற்புதமான காலி முகத்திடல் கடற்கரையில் மிகவும் உற்சாகமான மற்றும் குதூகலமான விளையாட்டு நடவடிக்கைகளான பாய்மரப் படகோட்டம், ஜெட் ஸ்கீயிங், டிராகன் படகுகள் மற்றும் கடல் கயாக்கிங் உள்ளிட்ட பல்வேறு வகையான விளையாட்டுச் செயற்பாடுகள் உள்ளூர் மற்றும் சர்வதேச நீர் விளையாட்டு ஆர்வலர்கள் காலிமுகத்திடலுக்கு வருகை தருவதற்கு ஈர்த்திருந்தது. இந்த நிகழ்வின் முக்கிய குறிக்கோளானது இலங்கையின் சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கும் மற்றும் பரந்த பொருளாதார அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்வதும் இதன் மூலமாக நாட்டை நீண்ட காலத்துக்கு சாகச சுற்றுலாவுக்கான ஒரு முன்னணி கேந்திரமாக நிலைநிறுத்துவதுமாகும்.

ஆரோக்கியமான தனிநபர்கள் மற்றும் மீள்தன்மை கொண்ட சமூகங்களின் அடித்தளத்திலேயே ஒரு வளமான நாடு கட்டமைக்கப்படுகின்றது. AIA எக்வாஃபெ(க)ஸ்ட் 2025 நமது நாட்டின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்துக்குப் பங்களிப்புச் செய்வதற்கான எங்களின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பைப் பறைசாற்றுகின்றது.



பான் ஏசியா வங்கியானது 2024 நிதியாண்டில் வழங்கிய சிறந்த மற்றும் விதிவிலக்கான பங்களிப்புகளை அங்கீகரிக்கும் வகையில் 2024 ஆம் ஆண்டுக்கான டிரெயில்பிளேசர் வருடாந்த சில்லறை விருதுகள் நிகழ்வில் அதன் உயர் செயல்திறன் கொண்ட ஊழியர்களின் சிறந்த சாதனைகளைக் கொண்டாடியது. இந்த நிகழ்வில் வங்கியின் தலைவர் அரவிந்த பெரேரா, பணிப்பாளர் சந்திரா வல்கம, பணிப்பாளரும் பிரதம நிறைவேற்றதிகாரியுமான நளீன் எதிரிசிங்க மற்றும் பெருநிறுவன முகாமைத்துவ உறுப்பினர்களும் கலந்துகொண்டுள்ளதைப் படங்களில் காணலாம்.

# உலகின் முன்னணி சர்வதேச வர்த்தக நாமங்களை உள்வாங்கி இலங்கையில் முன்னெடுக்கப்படவுள்ள Global Franchise Forum 2025

Global Franchise Forum (GFF) இலங்கை அமர்வு எதிர்வரும் ஏப்ரல் 27ஆம் திகதி கொழும்பு, Sheraton ஹோட்டலில் முன்னெடுக்கப்படவுள்ளது. உலகின் முன்னணி வர்த்தக நாமங்கள், முதலீட்டாளர்கள் மற்றும் தொழில்முயற்சியாளர்களை ஒன்றிணைக்கும் வகையில் அமையவுள்ள இந்த நிகழ்வு, இலங்கையின் சந்தையில் காணப்படும் விஸ்தரிப்பு வாய்ப்புகள் பற்றி அறிந்து கொள்வதற்கு உதவியாக அமைந்திருக்கும்.

இந்த அமர்வு, இந்திய-இலங்கை வர்த்தக சம்மேளனம், இலங்கை தேசிய தொழிற்துறை சம்மேளனம் (CNCI), சர்வதேச வர்த்தக சம்மேளனம் (ICC) இலங்கை, கொழும்பு வர்த்தக சம்மேளனம் மற்றும் இலங்கை வர்த்தக மற்றும் தொழிற்துறை சம்மேளனங்களின் கூட்டமைப்பு (FCCISL) உள்ளிட்ட முக்கிய அமைப்புகளின் ஆதரவைப் பெற்றுள்ளது. அவர்களின் ஒத்துழைப்பு, பிராந்தியத்தில் சர்வதேச உரிமையாளர் வளர்ச்சி மற்றும் பொருளாதார வளர்ச்சியை வளர்ப்பதில் நிகழ்வின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

தெற்காசியாவில் இலங்கை ஒரு மூலோபாய நுழைவாயிலாக அமைந்து, வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரம், சர்வதேச வர்த்தக நாமங்களுக்கு அதிகரித்து வரும் தேவையுடன் விரிவடையும் நுகர்வோர் சந்தை மற்றும் முதலீட்டாளர் நட்பு கொள்கைகளை வழங்குகிறது. விருந்தோம்பல், சில்லறை விற்பனை, சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற நாட்டின் செழிப்பான துறைகள், புதிய வாய்ப்புகளைத் தேடும் உலகளாவிய உரிமையாளர்களுக்கு வளமான வாய்ப்புகளை வழங்குகின்றன.

இலங்கையில் விரிவடையத் தயாராக உள்ள உலகளாவிய வர்த்தக நாமங்களைக் கொண்ட பிரத்தியேக franchise கண்காட்சி, வர்த்தக நாம உரிமையாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களுடன் நேரடி வணிக சந்திப்புகள் மற்றும் franchise நிபுணர்களால் வழிநடத்தப்படும் நுண்ணறிவுமிக்க தொழில்துறை விவாதங்களை பங்கேற்பாளர்கள் எதிர்நோக்கலாம்.

# பாதுகாப்பின் முக்கியத்துவம் பற்றி இலங்கை காப்புறுதிச் சங்கம் விடுக்கும் செய்தி



குறிப்பாக, விடுமுறைக்கால பயணங்கள் மற்றும் கொண்டாட்டங்களின்போது பாதுகாப்பு எப்போதும் முதன்மையாக இருக்க வேண்டுமென்பது இலங்கை காப்புறுதிச் சங்கத்தின் (IASL) கருத்தாகும். ஆண்டின் இப் பண்டிகைக்காலம் மகிழ்ச்சியைத் தந்தாலும் குறிப்பாக, விபத்துகள் மற்றும் பட்டாசு பயன்பாடானது ஆபத்துகளையும் கொண்டுள்ளது.

துரதிர்ஷ்டவசமாக ஒவ்வொரு ஆண்டும் சிறிய விபத்துகள் முதல் கடுமையான காயங்கள் வரை பல்வேறு சம்பவங்கள் பண்டிகைக் காலத்தில் ஏற்படுகின்றன. பட்டாசு பயன்பாட்டுக்கான வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதன் மூலமும் அவற்றைப் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்துவதன் மூலமும் பாதுகாப்புக்கு முன்னுரிமையளிப்பது நம் அனைவரதும் கடமையாகும். பட்டாசு பயன்பாட்டின்போது மனிதர்கள், விலங்குகள் என இருசாராருக்கும் ஏற்படும் பாதிப்பைத் தவிர்ப்பதற்கு சரியான மேற்பார்வை மற்றும் எச்சரிக்கை அவசியம். இலங்கை காப்புறுதிச் சங்கமானது (IASL) இப்பண்டிகைக் காலத்தில் காப்புறுதியின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்வதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது. எதிர்பாராத நிகழ்வுகளுக்கெதிராக உங்கள் காப்புறுதியால் வரும் மன அமைதி விலைமதிப்பற்றது. விபத்துகள், சொத்துச் சேதம் அல்லது காயங்கள் ஏற்பட்டால் காப்புறுதியானது நிதிப் பாதுகாப்பை வழங்குவதோடு உங்களுக்கு நம்பிக்கையையும் ஆதரவையும் வழங்குகின்றது.

# LankaPay Technnovation விருதுகள் 2025இல் கௌரவிக்கப்பட்ட செலான் வங்கி




செலான் வங்கி சமீபத்தில் LankaPay Technnovation விருதுகள் 2025இன் 7ஆவது பதிப்பில் மூன்று மதிப்புமிக்க விருதுகளை வென்றது. இதில் 'Acquiring Bank for the Best Mobile Application for Retail Payments via JustPay' விருதும் அடங்கும். இந்த விருது Bhasha Lanka (Pvt) Ltdஇன் Helapayக்கு வழங்கப்பட்டது. 2025 மார்ச் 26ஆம் திகதி, கொழும்பு ஷங்ரிலா Grand Ballroomஇல் நடைபெற்ற இந்த விருது வழங்கும் நிகழ்வு வாடிக்கையாளர் அனுபவங்களை மேம்படுத்துவதற்காக நிதி தொழில்நுட்ப முன்னேற்றங்களில் செலான் வங்கியின் தனித்தன்மையான முயற்சிகளுக்கான அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது.

செலான் வங்கி, B பிரிவில் ஆண்டின் Best Common ATM Enable விருதின் தங்கப் பதக்கத்தை பெருமையுடன் பெற்றுள்ளது. அதே பிரிவில் 'வாடிக்கையாளர் சௌகரியத்தில் சிறந்து விளங்குதல்' (Merit) மற்றும் 'நிதி உள்ளடக்கத்துக்கான ஆண்டின் நிதி நிறுவனம்' (Merit) ஆகியவற்றிலும் விருதுகளை வென்றனர். டிஜிட்டல் வங்கியியலில் புதுமைகளை ஊக்குவிக்கும் முயற்சிகளைக் கொண்ட ஒரு நிறுவனமாக அன்புடன் அரவணைக்கும் வங்கியை இவ் விருதுகள் மேலும் வலியுறுத்துகின்றன.

Bhasha Lanka (PVT) Ltd. நிறுவனத்துக்கு API வங்கி சேவைகளை வழங்குவதன் மூலம், Fintech/Start-upஐ ஆதரிப்பதில் வங்கிகளின் கூட்டு அணுகுமுறை மேலும் பிரதிபலித்தது. Helapayக்கு வழங்கப்பட்ட சேவைகள், The Acquiring Bank for JustPay digital paymentஆக வங்கி அங்கீகரிக்கப்படுவதற்கு வழிவகுத்தது.

அதிகரித்து வரும் டிஜிட்டல் உலகில் வளர்ந்து வரும் வாடிக்கையாளர் தேவைகளைப் பூர்த்தி செய்ய பொருத்தமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் அணுகக்கூடிய மற்றும் பாதுகாப்பான நிதி சேவைகளை மேம்படுத்துவதற்கான செலான் வங்கியின் முயற்சிகளையும் இந்த விருதுகள் நிரூபிக்கின்றன.

# Baurs துணை நிறுவனங்களின் பணிப்பாளராக டானியெலா முனசிங்க நியமனம்



இலங்கையில் பன்முகப்படுத்தப்பட்ட வியாபார செயற்பாடுகளைக் கொண்ட Baurs என அறியப்படும் A. Baur & Co. (Pvt.) Ltd., தனது மூன்று துணை நிறுவனங்களான Baurs Airservices, Swiss Hotel Management Academy (SHMA) மற்றும் Baurs Travel ஆகியவற்றின் பணிப்பாளராக டேனியலா ஜே. முனசிங்கவை நியமித்துள்ளதாக அறிவித்துள்ளது.

சொகுசு விருந்தோம்பல், உள்வருகை சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் கல்வி ஆகியவற்றில் 25 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ள டேனியலா, பிரயாணம் மற்றும் விருந்தோம்பல் துறைகளில் Baurs இன் பிரசன்னத்தை வலிமைப்படுத்தி மேம்படுத்த பெருமளவு அறிவு, தலைமைத்துவம் மற்றும் நோக்கு ஆகியவற்றைக் கொண்டுள்ளார்.

Hilton, Fairmont மற்றும் Marriott ஆகிய புகழ்பெற்ற ஹோட்டல் தொடர்களில் பெருமளவு பங்களிப்பை வழங்கிய அனுபவத்தை டேனியலா கொண்டுள்ளார். Kuoni DMC இல் செல்லிட முகாமைத்துவம் மற்றும் பிரயாணம் ஆகிய பிரிவுகளில் பணியாற்றியுள்ள டேனியலா, பிரத்தியேகமான பிரயாண அனுபவங்களை வடிவமைப்பது மற்றும் பாரியளவு சர்வதேச பிரயாண சரக்கு கையாளல்களை நிர்வகிப்பதில் பொறுப்பாக செயலாற்றியுள்ளார். வாடிக்கையாளர்கள் மற்றும் தொழிற்றுறையைச் சேர்ந்தவர்களிடமிருந்து அவரின் பணிகளுக்கான கௌரவிப்பு கிடைத்துள்ளது.

# இலங்கையின் வர்த்தகங்களை அபிவிருத்தி செய்வதற்கான ஏற்றுமதியாளர் ஒன்றுகூடலை நடத்திய NDB வங்கி



NDB வங்கியானது இலங்கையின் ஏற்றுமதித் துறையை வலுப்படுத்துவதற்கான தனது தொடர்ச்சியான உறுதிப்பாட்டின் மற்றொரு வெளிப்பாடாக ஏப்ரல் 4, 2025 அன்று மற்றொரு வெற்றிகரமான ஏற்றுமதியாளர் ஒன்றுகூடலை நடத்தியது. வடமேல் பிராந்தியத்தின் மையப்பகுதியான குருநாகலில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஏற்றுமதியாளர்கள் மற்றும் முக்கிய பங்குதாரர்கள் கலந்துகொண்டதுடன் அவர்கள் ஏற்றுமதியாளர்களின் அபிவிருத்தி மற்றும் வளர்ச்சியை விரைவுபடுத்துவதில் NDB இன் வர்த்தக வங்கி சேவைகளின் மூலோபாய பங்கு ஆகியவற்றை மையமாகக் கொண்ட கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இந்த ஒன்றுகூடலானது ஏற்றுமதிச் செயற்பாடுகளில் ஈடுபட விரும்பும் உள்நாட்டு தொழில்முயற்சியாளர்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் [SME] திறனை வெளிப்படுத்துவதில் கவனஞ்செலுத்தும் ஒரு முக்கியமான அறிவுப் பகிர்வு தளமாக செயற்பட்டது. அத்துடன், NDBயின் தலைமைக் குழுவானது வளர்ந்து வரும் உலகளாவிய சந்தையில் இலங்கை ஏற்றுமதியாளர்கள் வளர்ச்சியடையச் செய்வதற்கு உதவுவதற்கு அவசியமான நிதியியல் தீர்வுகள், ஆலோசனைச் சேவைகள் மற்றும் திறன் மேம்பாட்டுக்கான ஆதரவு ஆகியவற்றை வழங்கியது.

இந்த ஒன்றுகூடல் நிகழ்வானது NDB-யின் SME, நடுத்தர சந்தைகள் மற்றும் வர்த்தக வங்கியியல் துணைத் தலைவர் இந்திக ரணவீரவின் வரவேற்பு மற்றும் நிகழ்வு அறிமுகத்துடன் ஆரம்பமானது. அவர் இலங்கையின் ஏற்றுமதியாளர் தளத்தின் வளர்ச்சியை எளிதாக்குவதில் வங்கியின் நீண்டகால முயற்சிகளைப் பற்றி எடுத்துரைத்தார். மேலும் NDB வங்கியானது ஏற்றுமதியாளர்கள் சர்வதேச அளவில் போட்டித்தன்மை வாய்ந்த ஏற்றுமதியாளர்களாக மேம்படுத்தும் வகையில் வர்த்தக வங்கியியல் வாடிக்கையாளர்களை ஆதரிப்பதில் மேற்கொள்ளும் முலோபாய யுக்திகள் தொடர்பாகவும் அவர் எடுத்துரைத்தார்.

இந்த நிகழ்வில் முக்கிய அதிதி பேச்சாளராக தொழில்துறை உற்பத்திகள் பணிப்பாளர் திருமதி மனோஜா திசாநாயக்க கலந்துகொண்டார். அவர் இலங்கையின் தொழில்துறை திறன்கள் மற்றும் உள்நாட்டு நிறுவனங்கள் தமது சலுகைகளை உலகளாவிய தேவை போக்குகளுக்கேற்ப எவ்வாறு சீரமைக்க முடியுமென்பது குறித்து தனது உரையில் எடுத்தியம்பினார்.




உலகின் முன்னணி புதிய ஆற்றல் வாகனங்களின் (NEV) உற்பத்தியாளரான BYD நிறுவனம் மற்றும் அதன் இலங்கையின் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தரான John Keells CG Auto (JKCG Auto) நிறுவனத்துடன் இணைந்து அவர்களின் புதிய காட்சியறையை அண்மையில் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் காலி, நுகதுவ நுழைவாயிலுக்கு அருகாமையில் அண்மையில் திறந்து வைத்தபோது...

# சுயமான அசல் உபகரண டயர் சந்தையில் 90% க்கு மேற்பட்ட பங்கை வகிக்கும் சியெட்



சியெட் களனி ஹோல்டிங்ஸ் (CEAT Kelani Holdings) நிறுவனமானது இலங்கையில் தனது முதலாவது சுயமான உபகரண உற்பத்தியாளர் (OEM) பங்குடைமையில் நுழைந்து ஆறு ஆண்டுகள் ஆகும் நிலையில், நாட்டின் வளர்ந்து வரும் வாகன சாதனங்களைப் பொருத்தும் துறையில் பெறுமதி மிக்க பங்களிப்பை வழங்கி குறிப்பிடத்தக்க வளர்ச்சியடைந்துள்ளது.

உள்நாட்டில் தயாரிக்கப்படும் சியெட் டயர்கள், தற்போது இலங்கையின் வாகனப் பொருத்தல் துறையில் 11 வர்த்தகநாம வாகனங்களில் சுயமானதும் அசலானதுமான டயர்களாகத் திகழ்கின்றன. இதற்கிணங்க இவை விளையாட்டு பயன்பாட்டு வாகனங்கள் SUV கார்கள், பஸ்கள், லொறிகள், பிக்-அப் ட்ரக்குகள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஸ்கூட்டர்கள் வரையில், பயன்படுத்தப்படுவதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.

# புதிய வர்த்தக இலச்சினையை வெளியிட்ட Lina Manufacturing




Sunshine Holdings PLCஇன் மருந்து உற்பத்திப் பிரிவான Lina Manufacturing Limited, தனது புதிய வர்த்தக இலச்சினையை வெளியிட்டுள்ளது. ஒரு சிறந்த வர்த்தக இலச்சினையானது, நிறுவனத்தின் வளர்ச்சி, தூரநோக்குப் பார்வை மற்றும் மதிப்பிடத்தக்க தரமான சுகாதாரத் தீர்வுகளை வழங்கும் உறுதிப்பாட்டைப் பிரதிபலிக்கிறது.

Linaவின் வர்த்தக இலச்சினைப் பயணத்தில் ஒரு முக்கியமான மைல்கல்லைக் குறிக்கும் இந்தப் புதிய இலச்சினை, நிறுவனத்தின் பிரதான நோக்கத்துடன் இணைந்த ஒரு நவீன அடையாளத்தைக் கொண்டு ஒரு புதிய ஆரம்பத்தை சின்னமாகக் கொண்டுள்ளது. இந்த வடிவமைப்பு, ஒரு metered-dose இன்ஹேலர் (MDI) மற்றும் ஒரு capsule ஆகியவற்றின் வடிவங்களை ஒருங்கிணைக்கிறது. இது Linaவின் ஒரு முன்னோடி உள்நாட்டு மருந்து உற்பத்தியாளர் என்ற பங்கை வலியுறுத்துகிறது. Sunshine Holdingsஇன் பெருநிறுவன இலச்சினையில் இருந்து பெறப்பட்ட ஒரு பகுதியாகும்.





கொமர்ஷல் வங்கியானது லங்காபே தொழில்நுட்ப புத்தாக்க விருதுகள் 2025 இல் ஐந்து தங்க விருதுகளை வென்றுள்ளதுடன் இந்த விருதுகள் இலங்கையில் கட்டண தொழில்நுட்ப புத்தாக்கங்களில் வங்கியின் தலைமைத்துவத்தை வெளிப்படுத்துவதாகவும் உள்ளன. நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் தலைவர் ஷர்ஹான் முஹ்சீன் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க தலைமையிலான குழுவினரைப் படத்தில் காணலாம்.

www.thamilan.lk
திங்கட்கிழமை ஏப்ரல் 21, 2025
தமிழன்

# போரிடுவதைத் தவிர வேறு வழியில்லை!

## காஸாவில் போர் தொடரும்; நெதன்யாஹூ உறுதி




காஸாவில் தொடர்ந்து போரிடுவதைத் தவிர வேறு வழியில்லையென இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹூ தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகளுக்கிடையிலான போர் கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் 07ஆம் திகதி தொடங்கிய நிலையில் இப்போர் ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக இன்றும் நீடிக்கிறது. காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதலில் இதுவரை 51,201இற்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், ஒரு இலட்சத்து 16ஆயிரத்து 869இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். இந்நிலையில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் ஆகிய இரு தரப்பினருக்குமிடையே கடந்த ஜனவரியில், 42 நாட்களுக்கான முதற்கட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த போர்நிறுத்த ஒப்பந்தம் அண்மையில் நிறைவுக்கு வந்த நிலையில், போர் நிறுத்தத்தை நீட்டிப்பதற்கான ஒப்பந்தத்தில் இஸ்ரேல் பல்வேறு நிபந்தனைகளை விதித்தது. குறிப்பாக பணயக் கைதிகளை விடுவிக்காவிட்டால் தாக்குதல் தொடரும் என்று எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்நிலையில், ''காஸாவில் தொடர்ந்து போரிடுவதைத் தவிர வேறு வழியில்லை'' என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹூ தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

''ஹமாஸ் அழிக்கப்பட்டு, அனைத்து பணயக் கைதிகளும் விடுவிக்கப்படும் வரை போரை முடிவுக்குக் கொண்டுவர மாட்டோம். போரிடுவதைத் தவிர இஸ்ரேலுக்கு வேறு வழியில்லை. அப்போது தான் ஹமாஸ் படையினர் இஸ்ரேலுக்கு அச்சுறுத்தலாக இருக்காது என்பதை உறுதிசெய்ய முடியும்'' - இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# போர் நிறுத்தத்தை மீறி உக்ரைன்மீது ரஷ்யா தாக்குதல்



ரஷ்யா - உக்ரைனிடையே 24 மணி நேர தற்காலிக போர் நிறுத்தம் அமுல் படுத்தப்பட்டிருந்த நிலையில் அந்த ஒப்பந்தத்தை மீறி உக்ரைன் மீது ரஷ்யா தொடர்ந்து தாக்குதல் நடத்தியுள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி குற்றஞ்சாட்டினார்.

ஈஸ்டர் திருநாளை முன்னிட்டு, உக்ரைனுடனான தாக்குதலை, 24 மணி நேர போர் நிறுத்தம் செய்வதாக ரஷ்ய ஜனாதிபதி புட்டின் நேற்று முன்தினம் அறிவித்தார். இந்நிலையில் போர் நிறுத்தம் பற்றிய தோற்றத்தை உருவாக்க முயற்சிக்கிறார். எல்லை நகரங்களான குர்ச்க், பெல்கொரேட் போன்ற மாகாணங்களில் ரஷ்ய படைகள் தாக்குதல் நடத்தி வருகிறது.

ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு புட்டின் அறிவித்த போர் நிறுத்தத்தை மீறி ரஷ்ய படைகள் உக்ரைன் மீது 387 குண்டு வீச்சுத் தாக்குதல்களையும், 19 தரைவழித் தாக்குதல்களையும் நடத்தியுள்ளன என்று உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி குற்றஞ்சாட்டியுள்ளார்.


**உக்ரைனின் மற்றொரு கிராமத்தை கைப்பற்றிய ரஷ்யா**

ரஷ்யாவில் உக்ரைன் வசமிருந்த மற்றொரு கிராமத்தை ரஷ்ய இராணுவம் கைப்பற்றியுள்ளதாக அறிவித்துள்ளது.

உக்ரைன் -ரஷ்யா இடையேயான போர் சுமார் மூன்று ஆண்டுகளை கடந்து நடந்து வருவதுடன் இன்று (21) 1152ஆவது நாளாகவும் தொடர்கிறது.

இந்நிலையில் குர்ஷ்க் பிராந்தியத்தில் மற்றொரு கிராமத்தை ரஷ்யா கைப்பற்றியுள்ளது. ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகத்தின்படி உக்ரைனின் எல்லையிலுள்ள ஓலேஷ்னியா கிராமத்தை உக்ரைன் படைகளின் கட்டுப்பாட்டிலிருந்து ரஷ்யா மீட்டுள்ளது. உக்ரைன் துருப்புகள் அங்கிருந்து விரட்டி அடிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளது.







**ஈஸ்டர் திருநாளை முன்னிட்டு உலகம் முழுவதுமுள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் நேற்று (20) சிறப்புப் பிரார்த்தனைகள் நடைபெற்றன.**

**இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த நாளை கிறிஸ்தவர்கள் ஈஸ்டர் நாள் விழாவாக கொண்டாடுகின்றனர். அந்த வகையில் நேற்று (20) ஜெருசலேமிலுள்ள Sepulchre தேவாலயத்தில் சிறப்பு பிரார்த்தனைகள் இடம்பெற்றன.**

## ட்ரம்புக்கு எதிராக கொதிக்கும் அமெரிக்கா

# வெடித்தது '50501' போராட்டம்




அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் அரசு நிர்வாக கொள்கை முடிவுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து '50501' என்ற போராட்டத்தை மக்கள் முன்னெடுத்து 50 இடங்களில் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அமெரிக்க ஜனாதிபதியாக இரண்டாவது முறையாக ட்ரம்ப் பதவியேற்ற பின்னர், அரசு நிர்வாகத்தில் அவர் எடுக்கும் கொள்கை முடிவுகள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி வருகின்றன.

குறிப்பாக புலம்பெயர்ந்தோர் விவகாரம், அரசுத்துறை மறுசீரமைப்பு, எலான் மஸ்கின் திட்டங்களுக்கு எதிர்ப்பு, சர்வதேச நாடுகளுக்கு கூடுதல் வரிவிதிப்பு, கல்வி, சமூக பாதுகாப்பு, மற்றும் பொது சுகாதாரத்திற்கான நிதி குறைப்பு போன்ற விவகாரங்களுக்கு எதிராக அமெரிக்காவில் பல இடங்களில் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. முக்கியமாக 'Hands Off' என்ற முழக்கத்துடன் சமீபத்தில் நடந்த போராட்டத்தின் தொடர்ச்சியாக '50501' என்ற அமைப்பின் சார்பில் நேற்று முன்தினம் (19) முதல் போராட்டங்கள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் 50 மாநிலங்களிலும், வொஷிங்டன், நியூயோர்க், பிலடெல்பியா, மியாமி, லொஸ்ஏஞ்சல்ஸ் உள்ளிட்ட நகரங்களில் போராட்டங்கள் நடைபெற்றன. இந்த போராட்டங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றனர். அமெரிக்காவின் ஜனநாயகத்துக்கு ஆதரவாகவும், ட்ரம்பின் அதிகாரபூர்வ நடவடிக்கைகளுக்கு எதிராகவும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் குரல்களை எழுப்பினர். சமூக ஊடகங்களில் ட்ரம்புக்கு எதிரான போராட்டங்கள் குறித்து பலரும் பதிவிட்டு வருகின்றனர்.

கடந்த 5ஆம் திகதி 1,400 இடங்களில் நடந்த மிகப்பெரிய போராட்டங்களின் தொடர்ச்சியாக, தற்போது '50501' (50 போராட்டங்கள், 50 மாநிலங்கள், ஒரு நாள்) என்ற போராட்டக் குழுவின் சார்பில் 50 மாநிலங்களிலும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. ட்ரம்பின் வரிவிதிப்பு கொள்கையால் பங்குச் சந்தைகள் சரிவடைந்து, $5.4 டிரில்லியன் மதிப்பை இழந்தன. இதனால் பணவீக்கம் அதிகரித்தது.

இதுகுறித்து வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் கரோலின் லீவிட் தெரிவிக்கையில், 'போராட்டங்களால் ட்ரம்பை நிர்வாக நடவடிக்கையை தடுக்க முடியாது. அவர் மக்களால் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டவர்' எனத் தெரிவித்தனர். ட்ரம்பின் நிர்வாக உத்தரவுகளுக்கு எதிராக 170இற்கும் மேற்பட்ட வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இவற்றில் பல உத்தரவுகளுக்கு நீதிமன்றங்கள் தடை விதித்துள்ளன. எனவே ட்ரம்புக்கு எதிரான இன்றைய போராட்டங்களானது, அவரது நிர்வாகத்தின் பொருளாதார, சமூக, ஜனநாயகத்திற்கு எதிரான வலுவான எதிர்ப்பை வெளிப்படுத்தின.

சர்வாதிகாரத்துக்கு எதிராக ஜனநாயகத்தை பாதுகாக்க போராட்டத்தை தொடங்கியுள்ளதாகவும், மீண்டும் ஒரு சுதந்திர புரட்சியை உருவாக்குவோம் என்கின்றனர் போராட்டக்காரர்கள். சனிக்கிழமை முதல் ஆரம்பமாகிய போராட்டம் 50 மாகாணங்களில் 400இற்கும் மேற்பட்ட பேரணிகள் நடத்த திட்டமிட்டுள்ளனர். பலரும் ட்ரம்ப்புக்கு எதிராக பதாகைகள் ஏந்தி போராரடி வருகின்றனர். டவுண்டவுன், சான்பிரான்சிஸ்கோ, ஒரு கோடிக்கும் மேற்பட்ட போராட்டக்காரர்கள் திரள இருப்பதாக ஒருங்கிணைப்பு குழுக்கள் தெரிவிக்கின்றன. இன்னும் பலகட்ட போராட்டங்கள் நடக்கும் என்பதால் ட்ரம்ப் நிர்வாகம் அதிர்ந்து போயுள்ளது.

வொஷிங்டன் டிசியிலுள்ள துணை ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிடும் பேரணி தொடங்கியுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

# ''எனது மரணம் உலகத்துக்கே கேட்கும்''

## இஸ்ரேல் வான் தாக்குதலில் பலஸ்தீன பெண் ஊடகர் பலி



இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் காஸாவைச் சேர்ந்த பலஸ்தீன புகைப்பட ஊடகவியலாளரான பாத்திமா ஹசௌனா (Fatima Hassouna) கொல்லப்பட்டுள்ளார்.

காஸாமீதான இஸ்ரேலின் போர் நடவடிக்கைகளை 18 மாதங்களாக விவரித்து வந்தவர் பெண் புகைப்பட ஊடகவியலாளரான பாத்திமா ஹசௌனா (வயது 25). இவருக்கு திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டு இன்னும் சில நாட்களில் திருமணம் நடைபெறவிருந்த நிலையில், வடக்கு காஸாவின் தெற்கு ராபா பகுதியில் இஸ்ரேலிய ட்ரோன் தாக்குதலில் பாத்திமா ஹசௌனா உடன் கர்ப்பிணி சகோதரி உள்ளிட்ட அவரது குடும்பத்தைச் சேர்ந்த 10 பேர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொல்லப்பட்ட பாத்திமா ஹசௌனா, தனது வேலையின் அபாயங்கள் மற்றும் மோதல் மண்டலத்தில் இருப்பதன் ஆபத்துகள் குறித்து நீண்ட காலமாக அறிந்திருந்தார். இருப்பினும், அவற்றை நேரடியாக எதிர்கொள்ளத் தயாராக இருந்தார், தனது வரலாறு மற்றும் அவரது மக்களின் வரலாறு ஒரு நாள் கேட்கப்படும் என்று தீர்மானித்தார். மேலும் அவர், கடந்த ஓகஸ்ட் 2024 இல் ஓர் இன்ஸ்டாகிராம் பதிவில், ''நான் இறந்தால், எனக்கு ஒரு அதிர்ச்சியூட்டும் மரணம் வேண்டும், அவசர செய்திகளில் நான் இருக்க விரும்பவில்லை, அல்லது ஒரு குழுவுடன் ஓர் ஆளாக இருக்க விரும்பவில்லை. எனது மரணம் உலகத்திற்கே கேட்கும்படியும், காலத்திற்கும் நிலைத்திருக்கும்படியும் இருக்க விரும்புகிறேன்'' - எனப் பதிவிட்டுள்ளார். அவரின் இந்த பதிவு தற்போது பரவலாக பேசப்பட்டு வருகிறது. காஸா போரின் மனிதப் பக்கத்தை உலகுக்கு நினைவூட்டுவதாக அமைகிறது.

# இலங்கையுடன் இராணுவ ஒப்பந்தம் மேற்கொண்டு தமிழ் மக்களுக்கு துரோகமிழைத்துள்ளார் மோடி

## ம.தி.மு.க. நிர்வாகக் குழுக் கூட்டத்தில் கண்டனம்



இலங்கை இராணுவத்தோடு பிரதமர் நரேந்திர மோடி இராணுவ ஒப்பந்தம் செய்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது மட்டுமின்றி, தமிழ் மக்களுக்கு செய்திருக்கும் துரோகம் என ம.தி.மு.க. நிர்வாகக் குழுக் கூட்டத்தின்போது கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ம.தி.மு.க. நிர்வாகக் குழுக் கூட்டம், சென்னை, எழும்பூரிலுள்ள தலைமைக் கழகத்தில் நேற்று முன்தினம் (19) நடைபெற்றது. இந்த கூட்டத்தில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ சிறப்புரை ஆற்றினார். இந்த கூட்டத்தில் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவியை ஆளுநர் பொறுப்பிலிருந்து நீக்க வேண்டும் என்பது உள்ளிட்ட 9 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இதன்போது, இலங்கை இராணுவத்தோடு பிரதமர் நரேந்திர மோடி இராணுவ ஒப்பந்தம் செய்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது மட்டுமின்றி, தமிழ் மக்களுக்கு செய்திருக்கும் கொடும் துரோகம் ஆகும்.

நாள்தோறும் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கைதுசெய்யப்படுவதும், தாக்கப்படுவது குறித்தும் இந்தியப் பிரதமர் இலங்கை ஜனாதிபதியிடம் கண்டனத்தை பதிவுசெய்யாததை இக்கூட்டம் கண்டிக்கிறது என இக்கூட்டத்தின்போது கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாட்டில் மீண்டும் இனவாதம் தலைதூக்க ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்!

## ஜனாதிபதி அநுரகுமார ஆணித்தரமாகத் தெரிவிப்பு





(எஸ்.கணேசன், தலவாக்கலை, பொகவந்தலாவை நிருபர்கள்)

''அரசியல் செய்யும் உரிமை மற்றும் கருத்துச் சுதந்திரம் என்பவற்றை நாம் மதிக்கின்றோம். எனினும், அவற்றை அடிப்படையாகக்கொண்டு இந்நாட்டில் மீண்டும் இனவாதம் தலைதூக்க ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்''- என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஆணித்தரமாகத் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் பிரசாரக்கூட்டம் தலவாக்கலையில் நேற்று முன்தினம் (19) நடைபெற்றது. இக்கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்த ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில்,

''தேர்தலுக்காக கடந்த காலங்களில் மக்கள் பிரித்தாளப்பட்டனர். வடக்கு, தெற்கு, மலையகம் என வெவ்வேறாகப் பிரிந்து வெவ்வேறு கட்சிகளுக்கு வாக்களிக்கும் நிலைமை காணப்பட்டது. ஆனால், கடந்த தேர்தலின்போது மக்கள் இந்நிலைமையை மாற்றியமைத்தனர். அனைவரும் தேசிய மக்கள் சக்திக்குப் பின்னால் திரண்டனர். எனவே, அனைத்து மக்களையும் சமமாக நடத்தக்கூடிய அரசாங்கமொன்றே தேவை. அவ்வாறானதொரு அரசாங்கமே தற்போது ஆட்சியில் உள்ளது.

இந்நாட்டில் மீண்டும் இனவாதம் தலைதூக்க இடமளிக்கமாட்டோம். இனவாதத்தைத் தோற்கடிப்பதற்கு நாட்டில் தற்போதுள்ள சட்டங்கள் போதவில்லையெனில் புதிய சட்டங்களை இயற்றியாவது இனவாத அரசியல் தோற்கடிக்கப்படும்.

எமது நாட்டின் பொருளாதாரத்துக்கு மலையக மக்கள் பெரும் பங்களிப்பு வழங்குகின்றனர். தமது உயிரைக்கூட இந்நாட்டின் மண்ணுக்காக உரமாக்கியுள்ளனர். எனவே, அவர்களின் நாடு இலங்கை அல்ல என எப்படிக் கூறமுடியும்? அவர்கள் இந்நாட்டில் பிறந்து, வளர்ந்து, இறக்கின்றனர் எனில் அவர்கள் எங்கிருந்து வந்தனர் எனத் தேடிக்கொண்டிருப்பதில் பயனில்லை.

மலையக மக்கள் இங்கு வந்து 200 வருடங்கள் கடந்துவிட்டன. தற்போது அவர்கள் எங்கிருந்து வந்தனர் எனத் தேடுவதில் என்ன பயன் உள்ளது? எனவே, மலையக மக்களுக்கு உரிமை இல்லை எனக் கூறும் உரிமை எவருக்கும் கிடையாது. நாம் மனிதர்கள். அனைவரினதும் உரிமைகளை ஏற்கும் அரசாங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

எமது நாட்டில் மக்களுக்கிடையில் மீண்டும் போர் ஏற்படாத வகையிலான நாடொன்றை நாம் கட்டியெழுப்புவோம்'' - என்றார்.

## ரயில் மோதி கடவை மேற்பார்வையாளர் பலி

(செ.திவாகரன்)

கொழும்பிலிருந்து பதுளை நோக்கிச் சென்ற ரயில் மோதியதில் ஒருவர் உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை (19) அதிகாலையில் இடம்பெற்றுள்ளதாக பட்டிப்பொல பொலிஸார் தெரிவித்தனர்.

தியத்தலாவ பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய சம்பத் சல்காடு என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் ரயில் நிலையத்தில் ரயில் கடவை மேற்பார்வையாளராகப் பணிபுரிந்து வருகின்றார். ரயில் செல்லும்போது ரயில் தண்டவாளத்தில் படுத்துறங்கியமை பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து உயிரிழந்தவரின் சடலத்தை அதே ரயில் ஏற்றிச்சென்று அம்பேவெல ரயில் நிலையத்தில் ஒப்படைத்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பட்டிப்பொல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ரிப்பர் ரக லொறி வீதியை விட்டு விலகி கவிழ்ந்ததில் மூவர் காயம்

(எஸ்.கணேசன்)

தேயிலைக் கொழுந்துகளை ஏற்றிச்சென்ற ரிப்பர் ரக லொறியொன்று வீதியை விட்டு விலகி கவிழ்ந்ததில் மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் (19) நடைபெற்ற மேற்படி சம்பவத்தில் காயமடைந்த மூவர் டிக்கோயா ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து அன்றையதினம் பிற்பகல் 3.30 மணியளவில் ஹட்டன் - பொகவந்தலாவை பிரதான வீதியில் நோர்வூட் சென்ஜோண்டிலரி தோட்டப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பொகவந்தலாவை லொய்னோன் தோட்டத்திலிருந்து ஹட்டன் வனராஜா தோட்டத்துக்கு தேயிலைக் கொழுந்துகளை ஏற்றிச் சென்ற குறித்த லொறியில் ஏற்பட்ட திடீர் இயந்திரக் கோளாறு காரணமாகவே லொறி ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்து குறித்து விசாரணை நடத்திவரும் நோர்வூட் பொலிஸார், விபத்து நடந்த நேரத்தில் ரிப்பர் லொறியில் ஏழு பேர் பயணித்ததாகத் தெரிவித்தனர்.

## உள்ளூராட்சித் தேர்தலில் நுவரெலியாவில் 12 சபைகளையும் கைப்பற்ற நாம் தயார்

### கிருஷ்ணன் கலைச்செல்வி எம்.பி. தெரிவிப்பு

(எஸ்.கணேசன்)



''மே 06ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் 12 சபைகளையும் கைப்பற்றுவதற்கு நாம் தயார் நிலையில் இருக்கின்றோம். அதற்குரிய பேராதரவை மக்கள் எமக்கு வழங்கி வருகின்றனர்'' என்று தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணன் கலைச்செல்வி தெரிவித்தார்.

தலவாக்கலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலின்போது நாட்டைச் சுத்தப்படுத்தும் சிரமதானத்தை வெற்றிகரமாகச் செய்து முடித்துள்ளோம். நுவரெலியா மாவட்டத்தின் தலைவிதியையும் மாற்றினோம். இன்னும் ஒரு சிரமதானம் எஞ்சியுள்ளது. அதனையும் வெற்றிகரமாகச் செய்து முடிப்போம்.

பிறப்பு முதல் இறப்புவரை எமது வாழ்க்கையுடன் உள்ளூராட்சி சபைகள் தொடர்புபட்டுள்ளன. எனவே, ஊழல், மோசடிகளுடன் தொடர்புடையவர்களுக்கு ஆணை வழங்கிவிடக்கூடாது. கொள்கையை முன்வைத்து பிரசாரம் செய்வதைவிடுத்து, நுவரெலியா மாவட்டத்தில் இனவாதத்தைத் தூண்டும் வகையில் சில அரசியல்வாதிகள் பிரசாரத்தை முன்னெடுக்கின்றனர். எமது ஆட்சியில் இனவாதத்துக்கு இடமில்லை. அவ்வாறு பாகுபாடு காட்டப்படவும் மாட்டாது.

எனவே, இனவாதத்தைப் பரப்பும் அரசியல்வாதிகளின் கருத்துகளை மக்கள் நம்பக்கூடாது. அதேபோல, தமது கொள்கைகளை முன்வைத்து பிரசாரம் செய்யுமாறு அரசியல்வாதிகளிடமும் கேட்டுக்கொள்கின்றேன்'' என்றார்.

## பசறையில் காணாமல்போன நபர் சடலமாக மீட்பு

பசறை, பலாகொல்ல பகுதியில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன் காணாமல் போனதாகக் கூறப்படும் நபரொருவர் நேற்றுமுன்தினம் மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபர் பசறை பலாகொல்ல நெல்தண்டே பகுதியைச் சேர்ந்த 45 வயதுடையவரென அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபர் கடந்த 18ஆம் திகதி குறித்த பகுதியில் இடம்பெற்ற புத்தாண்டு விருந்துபசாரமொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் பசறை நகருக்கு தான் சென்று வருவதாக அவ்விடத்தில் இருந்தவர்களிடம் கூறிவிட்டு அவ்விடத்தை விட்டுச் சென்றுள்ளார்.

குறித்த நபர் வீடு திரும்பாததால் உறவினர்கள் அயலவர்களின் உதவியுடன் தேடுதலை மேற்கொண்டனர். இதன்போது நேற்று முன்தினம்(19) மாலை குறித்த பகுதியில் அமைந்துள்ள சிறிய ஆறு ஒன்றில் வீழ்ந்து உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

இதன்போது இவரின் மைத்துனரான நபரொருவர் பசறை பொலிஸ் நிலையத்துக்குச் சென்று, மேற்குறிப்பிட்ட நபர் தனது மூத்த அக்காவின் கணவர் என்றும் பசறை நகருக்குச் செல்வதாகக் கூறிவிட்டு சென்றவர் சடலமாகக் காணப்படுவதாகவும் புகாரளித்துள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் சம்பவம் தொடர்பில் நீதவான் நீதிமன்றத்தில் அறிக்கையொன்றைச் சமர்ப்பித்துள்ளதாகவும் நீதவான் பார்வையிட்டதன் பின்னர் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக பதுளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் இறந்தமைக்கான காரணம் கண்டறியப்படவில்லை. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# டக்ளஸ் தவறு செய்திருந்தால் கைதுசெய்யப்படுவார்

## இளங்குமரன் எம்.பி. தெரிவிப்பு

(சாவகச்சேரி நிருபர்)



முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்பில் எம்மிடம் முறைப்பாடுகள் கிடைத்தவண்ணமுள்ளன. உண்மையிலேயே அவர் குற்றஞ்செய்திருந்தால் கைதுசெய்யப்படுவாரென தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை சாவகச்சேரியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளரொருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்படி கருத்தைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், ''முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கைது செய்யப்படுவாரென்ற கருத்து நிலவி வருகிறது. எமது அரசாங்கத்தில் நீதித்துறை சுயாதீனமாக இயங்குகின்றது என்பதை அறிந்தவர்கள் இந்தக் கருத்தைக் கூறி வருகின்றனர்.

முன்னாள் அமைச்சர் டக்ளஸ் குற்றஞ்செய்திருந்தால் நிச்சயமாகக் கைதுசெய்யப்படுவார். அவர் காணி மோசடிகள் செய்திருப்பதாகப் பாதிக்கப்பட்டவர்கள் எம்மிடம் வந்து முறையிடுகின்றனர். நாம் அவ்வாறு வருபவர்களை பொலிஸ் மற்றும் நீதிமன்றத்தை நாடுமாறு வலியுறுத்தி வருகிறோம்.

தென்னிலங்கையில் துப்பாக்கிக் கலாசாரம் காணப்படுவதால் எமது மக்கள் பொலிஸ் நிலையத்துக்குச் செல்ல அஞ்சுகின்றனர். எதிர்காலத்தில் பிரதேச சபைகளும் எம்வசம் வரும்போது சகல பிரச்சினைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

கடந்த காலங்களில் யார் தவறு செய்திருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள். பல கொலைகள் நடந்துள்ளன. அதற்கெல்லாம் உரியவர்கள் பதில் கூற வேண்டிவரும்'' என அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

## அன்னை பூபதி நினைவாக பிரித்தானிய பிரதமர் அலுவலகம் முன்பு உண்ணாவிரதப் போராட்டம்




(பு.கஜிந்தன்)

தியாகதீபம் அன்னை பூபதியின் 37ஆவது நினைவு நாளை அனுஷ்டிக்கும் முகமாக, பிரித்தானிய பிரதமர் அலுவலகத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் (19) தமிழீழ சுயநிர்ணய அமைப்பின் ஏற்பாட்டில் உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஈழத்தமிழ் மக்களின் விடுதலைக்காக தன்னலமின்றி தன்னை அர்ப்பணித்த அன்னை பூபதியின் தியாகத்தை நினைவுகூரும் வகையில் இந்நிகழ்வு நடத்தப்பட்டது. லண்டனின் மையப் பகுதியில் அமைந்துள்ள டவுனிங் வீதி 10ஆம் எண்ணிலுள்ள பிரதமர் அலுவலகம் முன்பு நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் இங்கிலாந்தில் வாழும் தமிழர்கள் பெருமளவில் கலந்துகொண்டனர்.

உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் ஈழத் தமிழருக்கான சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தியும் இலங்கையில் நடைபெற்ற தமிழின அழிப்புக்கு நீதி கோரியும் முழக்கங்களை எழுப்பினர். போராட்டத்தின் மூலம் பிரித்தானிய அரசின் கவனத்தை ஈர்த்து சர்வதேச மேடைகளில் தமிழருக்கான உரிமை விவகாரம் மீண்டும் பேசப்பட வேண்டுமென அவர்கள் வலியுறுத்தினர்.

போராட்டத்தில் கலந்துகொண்ட தமிழீழ சுயநிர்ணய அமைப்பின் ஒருங்கிணைப்பாளர், "அன்னை பூபதி ஒரு மகத்தான தியாகத்தின் அடையாளம். அவரது நினைவு நாளில், அவரது இலட்சியங்களை நிலைநாட்டும் விதமாக உலக சக்திகளை நாம் கேட்க வைக்க வேண்டிய கட்டாயம் உள்ளது" - எனத் தெரிவித்தார்.

## பிரதமரின் வருகையை முன்னிட்டு வவுனியாவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் திடீர் சோதனை




(சிவகுமார் திவியா)

பிரதமரின் வருகையை முன்னிட்டு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் வவுனியாவில் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

குறிப்பாக, பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து உக்குளாங்குளம் சீர்திருத்த விளையாட்டு மைதானத்தில் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் ஈடுபட வருகை தந்தார்.

இந்நிலையில், குறித்த பகுதியில் திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட சுகாதாரப் பரிசோதகர்கள், சிவில் பாதுகாப்புக் குழுவினர், சீர்திருத்த விளையாட்டுக் கழகத்தினர் ஆகியோரின் பங்களிப்புடன் அப்பகுதிகளில் நீர் தேங்கி நிற்கும் வகையில் காணப்பட்ட பொருட்கள், குப்பைகூழங்கள் என்பன அகற்றப்பட்டதுடன், பிரதேச சபை வாகனங்களின் உதவியுடன் அவை அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டன.

மேலும், நீர் தேங்காதவண்ணம் வீட்டுச் சூழலையும் அயல் சூழலையும் பாதுகாக்குமாறு அப்பகுதி மக்களுக்கு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

## 'காட்டிக்கொடுக்கப்பட்ட கடலும் கைவிடப்பட்ட மக்களும்'

### மரியநாயகம் நியூட்டனின் நூல் வெளியீடு

(பு.கஜிந்தன்)

யாழ். கிராமிய உழைப்பாளர் சங்கம், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் ஆகியவற்றின் இணைந்த ஏற்பாட்டில் மரியநாயகம் நியூட்டன் (நோர்வே) எழுதிய 'காட்டிக் கொடுக்கப்பட்ட கடலும் கைவிடப்பட்ட மக்களும்' நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை யாழில் உள்ள மண்டபத்தில் யாழ். கிராமிய உழைப்பாளர் சங்கத் தலைவர் என்.இன்பம் தலைமையில் நடைபெற்றது.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் அமைப்பாளர், உலக மீனவ சம்மேளன பொதுச்செயலாளர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணித் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பொ.கஜேந்திரகுமார் ஆகியோர் கலந்துகொண்டு



நூலை வெளியிட்டு வைத்தனர்.

இந்நிகழ்வில் வடமாகாண கடற்றொழிலாளர் இணைய ஊடகப் பேச்சாளர் அ.அன்னராசா, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிப் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன், கிராமிய அமைப்பினர்கள், மீனவ சமூகத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# இயேசுவின் உயிர்ப்பு சாவின் மேல் வாழ்வு பெற்ற வெற்றியை எடுத்துக் காட்டுகின்றது

## மன்னார் மறைமாவட்ட ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை

(ஜோசப் நயன்)



இயேசுவின் உயிர்ப்பு மனுக்குலத்துக்கு ஒரு நம்பிக்கையை வழங்கியுள்ளது. இயேசுவின் உயிர்ப்பு நமக்கு ஆறுதலின் செய்தியைத் தருகிறது. அதாவது, நமது பாடுகளின் பின்னால் நமக்கும் உயிர்ப்பு வெற்றி உண்டு என்பதே அச்செய்தி என மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் விடுத்துள்ள உயிர்ப்பு பெருவிழா செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஈஸ்ரர் பெருவிழா என்பது இயேசுவின் உயிர்ப்பைக் கொண்டாடும் விழாவாகும். இது கிறிஸ்தவர்களின் உயிர்நாடியான விழாவாகும். தவக்காலம் என்று சொல்லப்படுகின்ற நாற்பது நாட்கள் ஒறுத்தல், தவ முயற்சிகளை மேற்கொண்டு கிறிஸ்தவர்கள் தங்களை ஆன்மீக ரீதியில் ஆயத்தம் செய்து புனித வாரத்துக்குள் நுழைகின்றனர்.

இந்தப் புனித வாரத்தில் வரும் முக்கிய நாட்களான பெரிய வியாழன், பெரிய வெள்ளி, புனித சனி, உயிர்ப்பு ஞாயிறு ஆகியவை கிறிஸ்தவர்களின் விசுவாச வாழ்வில் மிக முக்கியமான, புனிதமான நாட்களாகும்.

இயேசுவின் பாடுகள் மரணம், உயிர்ப்பு ஆகியவற்றை மிகுந்த பக்தி வணக்கத்தோடு இந்நாட்களில் கிறிஸ்தவர்கள் நினைவு கூருகின்றனர். இயேசுவின் பாடுகள் மரணம், உயிர்ப்பு ஆகியவற்றை ஒன்று சேர்த்து பாஸ்கா விழா என அழைக்கின்றனர். இயேசுவின் உயிர்ப்பு கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படையாகும்.

இயேசுவின் உயிர்ப்பு குறித்து புனித பவுல் குறிப்பிடும்போது, ''கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லையென்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருந்த நம்பிக்கையும் பொருளற்றதாகி விடும்'' என்கிறார். எனவே, கிறிஸ்தவ சமயத்தின் அடிப்படையாக, அத்திவாரமாக, ஆணிவேராக இருப்பது இயேசுவின் உயிர்ப்பு நிகழ்வாகும். இயேசுவின் உயிர்ப்பில் தான் கிறிஸ்தவம் கட்டப்பட்டுள்ளது.

மனிதனின் அறிவியல் வளர்ச்சி எவ்வளவு உயர்ந்து சென்றாலும் மரணத்துக்குப் பின்னர் மனிதனுக்கு என்ன நடக்கிறது என்பது குறித்து மனித அறிவியல் தெளிவான விளக்கத்தை இதுவரை தரவில்லை. ஆனால், கிறிஸ்தவ நம்பிக்கை அதற்குத் தெளிவான பதிலைத் தருகிறது.

அப்பம் இயேசுவின் உயிர்ப்பை அடிப்படையாகக் கொண்டதாகும். இயேசுவின் உயிர்ப்பு சாவின் மேல் வாழ்வு பெற்றுக்கொண்ட வெற்றியை எடுத்துக்காட்டுகின்றது. கிறிஸ்தவ பாரம்பரியத்தில் கிறிஸ்துவின் உயிர்ப்பு என்பது சாவின் மேல் இயேசு ஏற்படுத்திய வெற்றியை வெளிப்படுத்துகின்றது. அத்துடன், இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் பெறக்கூடிய விண்ணக வாழ்வின் நம்பிக்கையை வழங்குகின்றது.

இயேசுவின் உயிர்ப்பு மனுக்குலத்துக்கு ஒரு நம்பிக்கையை வழங்கியுள்ளது. இயேசுவின் உயிர்ப்பு நமக்கு ஆறுதலின் செய்தியைத் தருகிறது. அதாவது, நமது பாடுகளின் பின்னால் நமக்கும் உயிர்ப்பு, வெற்றி உண்டு என்பதே அச்செய்தி. இயேசுவின் பாடுகள் மரணத்தோடு அவருடைய வாழ்வு முற்றுப் பெறவில்லை. இயேசுவின் சீடர்கள் கூட ஆரம்பத்தில் அப்படித்தான் நினைத்தார்கள்.

நம்பிக்கை இழந்து நின்றார்கள். ஆனால், இயேசு இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார். வெற்றிவாகை சூடினார். நம்முடைய வாழ்வும் பாடுகள் நிறைந்த வாழ்வுதான். துன்பங்கள், போராட்டங்கள் நிறைந்த வாழ்வுதான்.

ஆனாலும், நாம் நம்பிக்கை இழக்கக்கூடாது. வாழ்க்கையில் விரக்தியடையக்கூடாது. காரணம், இயேசு தனது துன்பத்தை, சிலுவைப் பாடுகளைக் கடந்து உயிர்ப்பின் வெற்றியை அடைந்தது போல, விண்ணேற்றமடைந்து மகிமை பெற்றதைப் போல, நாமும் வெற்றியை, மகிமையைப் பெறுவோம் என நம்புவதற்கு இயேசுவின் உயிர்ப்பு நமக்கு உறுதிப்பாட்டைத் தருகிறது.

உங்கள் அனைவருக்கும் எனது உயிர்ப்பு பெருவிழா வாழ்த்துகள். அன்னை மரியாவின் வழியாக மருதமடு அன்னையின் பரிந்துரையூடாக உங்கள் அனைவரையும் இறைவன் நிறைவாக ஆசீர்வதிப்பாராக என குறிப்பிடப்பட்டுள்ளது.

# அவேஷ் கான் கலக்கல்; கடைசி பந்தில் லக்னோ வெற்றி



ராஜஸ்தான் ரயல்ஸுக்கெதிராக ஜெய்ப்பூரில் நடைபெற்ற போட்டியில் லக்னோ அணி 02 ஓட்டங்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது. கடைசி ஓவரை கலக்கலாக வீசி, ஹீரோ ஆனார் அவேஷ் கான்.

ஜெய்ப்பூரில் நேற்று முன்தினம் நடந்த பிரீமியர் லீக் போட்டியில் ராஜஸ்தான் - லக்னோ அணிகள் மோதின. நாணய சுழற்சியில் வென்ற லக்னோ அணி கப்டன் ரிஷாப் பன்ட், துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தார். முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ அணி 05 விக்கெட்டுகளை இழந்து 180 ஓட்டங்களை எடுத்தது. 20 ஓவர்கள் விளையாடிய ராஜஸ்தான் அணி 05 விக்கெட்டுகளை இழந்து 178 ஓட்டங்களை எடுத்தது.

ராஜஸ்தான் அணிக்காக 2011 ஆம் ஆண்டு பிறந்த சூர்யவன்ஷி விளையாடினார். கடந்த 2008இல் பிரீமியர் தொடர் துவங்கியது. இதன் பின் பிறந்து, பிரீமியர் போட்டியில் அறிமுகமானார் முதல் வீரர் சூர்யவன்ஷி.

ராஜஸ்தான் வெற்றிக்கு கடைசி ஓவரில் 09 ஓட்டங்கள் தேவைப்பட்டன. அவேஷ் கான் பந்துவீசினார். முதல் 02 பந்தில் 03 ஓட்டங்கள் கிடைத்தன. அடுத்து ஹெட்மயர் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 04ஆவது பந்தை அவேஷ் கான் யார்க்கராக வீச ஓட்டம் எடுக்கப்படவில்லை. 05ஆவது பந்தில் கேட்ச் ஆகாமல் தப்பிய ஷுபம் துபே 02 ஓட்டங்களை எடுத்தார். கடைசிப் பந்தில் வெற்றிக்கு 04 ஓட்டங்கள் தேவைப்பட்டன. இந்தத் தடவை துபே ஒரு ஓட்டம் மட்டும் எடுக்க, ராஜஸ்தான் அணி 20 ஓவரில் 178/5 ஓட்டங்களை மட்டும் எடுத்து தோல்வியடைந்தது.

பிரீமியர் கிரிக்கெட்டில் அறிமுகமான இளம் வீரர் ஆனார் வைபவ் சூர்யவன்ஷி (14 வயது, 23 நாள்). நேற்றுமுன்தினம் ராஜஸ்தான் அணிக்காக இம்பேக்ட் வீரராக விளையாடினார். இதற்கு முன் 2019இல் பெங்களூர் அணியில் பிரயாஸ் ராய் பர்மன், 16 வயது, 157 ஆவது நாளில் அறிமுகமாகியிருந்தார்.

★ 2008இல் பிரீமியர் தொடர் துவங்கப்பட்டது. இதன் பின் பிறந்து, பிரீமியர் போட்டியில் அறிமுகமான முதல் வீரர் சூர்யவன்ஷி (2011, மார்ச் 27, பீஹார்).

★ பிரீமியர் ஏலத்தில் ரூ. 1.10 கோடிக்கு வாங்கப்பட்டார்.

ராஜஸ்தான் அணிக்காக முதல் 03 போட்டிகளில் கப்டனாகக் களமிறங்கியவர் ரியான் பராக். இதனிடையே ரெகுலர் கப்டன் சாம்சன், வயிற்றுப்பகுதி வலி காரணமாக நேற்றுமுன்தினம் களமிறங்கவில்லை. இதனால் ரியான் பராக் மீண்டும் கேப்டன் பொறுப்பேற்றார்.

லக்னோ வீரர் நிக்கோலஸ் பூரன், ஒரு ஓட்டம் எடுத்தபோது, ரி-20 அரங்கில் 9,000 ஓட்டங்கள் என்ற மைல்கல்லை எட்டினார். இவர் 392 போட்டியில் 9,010 ஓட்டங்களை எடுத்துள்ளார். கெய்ல் (463இல் 14,562), போலார்டு (695இல் 13,537), ஆன்ட்ரி ரசலுக்கு (545இல், 9,042) அடுத்து இந்த இலக்கை அடைந்த 04ஆவது வெஸ்ட் இன்டீஸ் வீரர் ஆனார் பூரன்.

பிரீமியர் ஏல வரலாற்றில் அதிக தொகைக்கு (ரூ. 27 கோடி) ஒப்பந்தம் ஆன வீரர் என்ற வரலாற்றுச் சாதனையுடன் லக்னோ அணியில் இணைந்தார் ரிஷாப் பன்ட்.

துரதிர்ஷ்டவசமாகத் தொடர்ந்து தடுமாறுகிறார். இதுவரை 08 போட்டிகளில் (0, 15, 2, 2, -, 21, 63, 3), ஓர் அரைச்சதம் மட்டும் அடித்து, 106 ஓட்டங்களைத் தான் எடுத்துள்ளார்.

# உலக தடகள ரிலேக்கு உகண்டா அணி தகுதி



சீனாவின் குவாங்சோவில் நடைபெறும் 2025 உலக தடகள ரிலேக்களுக்கு உகண்டாவின் 4X400 மீற்றர் ரிலே அணி தகுதி பெற்றுள்ளது. இது உலக தடகள ரிலேயில் உகண்டாவின் முதல் போட்டியாகும். இது 2025 உலக தடகள சம்பியன்ஷிப்புக்கான தகுதிப் போட்டியாகவும் செயற்படுகிறது.

உகண்டா தடகள கூட்டமைப்பின் (UAF) தலைவர் டொமினிக் ஒடுசெட், உலக தடகளம் உகண்டாவின் தகுதியை உறுதிப்படுத்தியதாகக் கூறினார். உகண்டா அணியில் ஹரோல்ட் அடோலி, காட்ஃப்ரே சான்வெங்கோ, ஷிடா லெனி, மௌரீன் பானுரா ஆகியோர் உள்ளனர்.

உலகக் கிண்ணத்தில் அறிமுகமான போதிலும், அணியின் நேரத்தை மேம்படுத்தி உலக சம்பியன்ஷிப் இடத்தைப் பெறுவதற்கான திறன் குறித்து ஒடுசெட் நம்பிக்கை தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டு பஹாமாஸில் நடந்த போட்டியில் சிறந்து விளங்கிய அமெரிக்கா, நெதர்லாந்து, அயர்லாந்து போன்ற முன்னணி கலப்பு ரிலே அணிகளிடமிருந்து உகண்டா கடுமையான போட்டியை எதிர்கொள்ளும்.

# சதத்தை தவறவிட்ட ஜோஸ்பட்லர் முதலிடத்தில் டில்லி



டில்லிக்கு எதிரான போட்டியில் ஜோஸ் பட்லர், 97 ஓட்டங்களை எடுக்க குஜராத் அணி 07 விக்கெட் வித்தியாசத்தில் வென்று புள்ளிப்பட்டியலில் முதலிடத்துக்கு முன்னேறியது.

அஹமதாபாத் மோடி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடந்த பிரீமியர் லீக் போட்டியில் குஜராத், டில்லி அணிகள் மோதின. நாணய சுழற்சியில் வென்ற குஜராத் கேப்டன் சுப்மன் கில், பந்துவீச்சைத் தெரிவு செய்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய டில்லி 03 விக்கெட்டுகளை இழந்து 202 ஓட்டங்களை எடுத்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய குஜராத் 19.2 ஓவர்களில் 03 விக்கெட்டுகளை இழந்து 304 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது.

டில்லி அணி வீரர்களான கருண் நாயர் 31, ஸ்டப்ஸ் 31 ஓட்டங்களில் வெளியேறினர். அர்ஷத் கான் பந்தில் ஒரு ஓட்டம் எடுத்த அக்சர் படேலுக்கு கணுக்காலில் காயம் ஏற்பட்டது. சிறிது நேர சிகிச்சைக்குப் பின் ஆட்டத்தைத் தொடர்ந்து 39 ஓட்டங்களுடன் வெளியேறினார். அஷுதோஷ், 37 ஓட்டங்களை எடுத்தார். ஒருவர் கூட அரைச் சதத்தை எட்டவில்லை. டில்லி அணி 20 ஓவர்களில் 08 விக்கெட்டுகளை இழந்து 203 ஓட்டங்களை எடுத்தது. குஜராத் சார்பில் பிரசித் கிருஷ்ணா 04 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

சவாலான இலக்கை விரட்டிய குஜராத் அணிக்கு கப்டன் சுப்மன் கில் 07 ஓட்டங்களுடன் வெளியேறினார். சாய் சுதர்சன், ஜோஸ் பட்லர் சேர்ந்து டில்லி பந்துவீச்சைச் சிதறடித்தனர். குல்தீப் சுழலில் சுதர்சன் 36 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ஸ்டார்க் ஓவரில் (15ஆவது), பட்லர் தொடர்ந்து 05 பவுண்டரி அடிக்க, 20 ஓட்டங்கள் எடுக்கப் பட்டன. ஷெர்பேன் 43 ஓட்டங்களை எடுத்தார்.

குஜராத் வெற்றிக்கு கடைசி ஓவரில் 10 ஓட்டங்கள் தேவைப்பட்டன. தொடையில் ஏற்பட்ட பிடிப்பைப் பொருட்படுத்தாமல் ஆடிய பட்லர், 97 ஓட்டங்களை எடுத்திருந்தார். ஸ்டார்க் பந்துவீசினார். முதல் இரு பந்துகளில் டிவாட்யா ஒரு சிக்ஸர், பவுண்டரி அடிக்க, பட்லரின் சதம் அடிக்கும் கனவு தகர்ந்தது. குஜராத் அணி 19.2 ஓவர்களில் 204 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது.

# ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தலைமை பயிற்சியாளராக காஸ்மின் நியமனம்



ருமேனியாவைச் சேர்ந்த காஸ்மின் ஒலரோயுவை இரண்டு வருட ஒப்பந்தத்தில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தேசிய உதைபந்தாட்ட அணியின் தலைமைப் பயிற்சியாளராக நியமித்ததாக அறிவித்தது.

அதிகாரபூர்வ அறிக்கையின்படி, ஜூன் 05ஆம் திகதி உஸ்பெகிஸ்தானுக்கு எதிரான ஒரு போட்டி, அதைத் தொடர்ந்து ஜூன் 10 ஆம் திகதி கிர்கிஸ்தானுடன் மோதும் இரண்டு முக்கியமான 2026 உலகக் கிண்ண தகுதிச் சுற்றுப் போட்டிகளுக்கு ஒலரோயு ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியின் பொறுப்பாளராக இருப்பார்.

ஒலரோயு எமிராட்டி உதைபந்தாட்டத்துக்குப் புதியவரல்ல. முன்னர் அல் - ஐன், ஷபாப் அல் - அஹ்லி, சமீபத்தில் ஷார்ஜா எஃப்சி உள்ளிட்ட பல கிளப்புகளுக்குப் பயிற்சியாளராகப் பணியாற்றியுள்ளார். அவருடன் இணைந்து AFC சம்பியன்ஸ் லீக்கின் இறுதிப் போட்டியை எட்டியது.

ஆசிய உலகக் கிண்ண தகுதிச் சுற்றில் ‘ஏ’ பிரிவில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தற்போது 13 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளது.

உலகக் கிண்ண தகுதிச் சுற்றில் கொரிய ஜனநாயக மக்கள் குடியரசை ஐக்கிய அரபு எமிரேட்ஸ் 2:1 என்ற கணக்கில் வென்ற சில மணி நேரங்களுக்குப் பிறகு, மார்ச் 26 அன்று ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உதைபந்தாட்டச் சங்கம் முன்னாள் தலைமைப் பயிற்சியாளர் பாலோ பென்டோவையும் அவரது ஊழியர்களையும் பணிநீக்கம் செய்தது.

# அஸாருதீனின் பெயரை நீக்க உத்தரவு





ராஜீவ் காந்தி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தின் வடக்கு பெவிலியன் ஸ்டாண்டிலிருந்து முகமது அஸாருதீனின் பெயரை நீக்க ஹைதராபாத் கிரிக்கெட் சங்க (HCA) குறைதீர்ப்பாணை உத்தரவு பிறப்பித்துள்ளது. முன்னாள் பொறுப்பு தலைமை நீதிபதி வி. எஸ்வராய்யா பிறப்பித்த உத்தரவில், முன்னாள் இந்திய கேப்டனின் பெயருடன் எந்த டிக்கெட்டுகளும் அச்சிடப்படக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினை 2019ஆம் ஆண்டு HCA தலைவராக அஸாருதீன் இருந்தபோது தொடங்கியது. அந்த ஆண்டு நவம்பர் 25ஆம் திகதி 62 வயதான அஸாருதீன் தலைமையில் நடைபெற்ற உச்ச மன்றக் கூட்டத்தில் வடக்கு ஸ்டாண்டுக்கு அஸாருதீன் ஸ்டாண்ட் என்று பெயரிட முடிவு செய்யப்பட்டது. அது அப்போது VVS லட்சுமணன் பெவிலியன் என்று அழைக்கப்பட்டது.

இந்த ஆண்டு பெப்ரவரி 28 அன்று, HCA-வில் உள்ள 226 உறுப்பினர்களில் ஒன்றான லார்ட்ஸ் கிரிக்கெட் கிளப் (LCC) ஒரு புகாரை அளித்தது. அஸாருதீனின் பெயரை ஸ்டாண்டுக்கு சூட்டுவது HCAவின் சங்கக் குறிப்பாணை மற்றும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை மீறுவதாகக் கூறியது. விதி 38இன் படி, உச்ச கவுன்சிலின் உறுப்பினர் ஒருவர் தங்களுக்கு ஆதரவாக எந்த முடிவையும் எடுக்க முடியாது என்று அது வாதிட்டது.

இருப்பினும், அசாருதீன், நலன் மோதல் தொடர்பான அனைத்து குற்றச்சாட்டுகளையும் மறுத்துள்ளார். மேலும் HCA குறைதீர்ப்பாளரின் உத்தரவை எதிர்த்து உயர் நீதிமன்றத்தை அணுகப்போவதாகக் கூறினார்.

# ஸ்கேட்டிங் சம்பியனான அலிசா லியூ மீண்டும் களத்தில்



உலக ஃபிகர் ஸ்கேட்டிங் சம்பியனான அலிசா லியூ, சனிக்கிழமை டோக்கியோவில் நடந்த உலக அணி கிண்ணப் போட்டியில் அமெரிக்க அணியின் வெற்றியுடன் தனது மறு பிரவேச சீசனை முடித்தார்.

2022ஆம் ஆண்டு தனது 16 வயதில் விளையாட்டிலிருந்து விலகி கடந்த ஆண்டு மீண்டும் பனிக்கட்டிக்குத் திரும்பிய லியூ, பெண்களுக்கான ஃப்ரீ ஸ்கேட்டில் சீசனின் சிறந்த ஸ்கோரான 150.97 உடன் அமெரிக்க அணி வீராங்கனை அம்பர் க்ளெனை முந்தி முதலிடம் பிடித்தார்.

இந்த வெற்றியின் மூலம் ஆறு அணிகள் பங்கேற்ற சீசன் முடிவுப் போட்டியில் அமெரிக்கா வெற்றி பெற்றது. ஜப்பான் இரண்டாவது இடத்தையும் இத்தாலி மூன்றாவது இடத்தையும் பிடித்தன.

கடந்த மாதம் பாஸ்டனில் தனது முதல் உலக பட்டத்தை லியூ வென்றார். மேலும், 19 வயதான அவர் தனது சமீபத்திய வெற்றியில் திருப்தியடைந்தார்.

க்ளென் 148.93 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்தார். ஜப்பானின் கயோரி சகாமோட்டோவை 145.00 புள்ளிகளுடன் முந்தினார்.

இந்த வாரம் டோக்கியோவில் நடந்த பெண்களுக்கான போட்டியிலும் லியூ வென்றார்.

இந்த வெற்றி அமெரிக்க ஸ்கேட்டர்களுக்கு வெற்றிகரமான பருவத்துக்குப் பொருத்தமான முடிவாக அமைந்தது. ஐஸ் நடன இரட்டையர்களான மேடிசன் சாக், இவான் பேட்ஸ் ஆகியோர் பாஸ்டனில் நடந்த உலக சம்பியன்ஷிப் தங்கத்தையும் வென்றனர். அது ஜனவரி மாதம் வொஷிங்டனில் நடந்த ஒரு கொடிய விமான விபத்தில் நிகழ்ந்த துயரச் சம்பவத்தில் இறந்த 67 பேரில் 28 பேர் ஸ்கேட்டிங் வீரர்கள்.

மாணவர்களின் கல்வி வழிகாட்டியான ஜூனியர் தமிழன் ஏப்ரல் மாத சஞ்சிகைகள்

தற்போது விற்பனையில்...



ஒவ்வொரு சஞ்சிகைக்குள்ளும் இணைக்கப்பட்டுள்ள படத்தாள் ஒன்றினை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்.

- ☑ புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்
- ☑ வினாத்தாள் I, II வழிகாட்டிகள்
- ☑ தமிழ், கணிதம், சுற்றாடல் பாட செயலட்டைகள் (தவணைகளின் அடிப்படையில்)
- ☑ திறன் அடிப்படையிலான நுண்ணறிவு விளக்கங்கள்
- ☑ தரம் - 5 சுற்றாடல் பாடத்தொகுப்பு - 04, 05
  - இசைக்கருவிகளின் சுற்றாடல்
  - இரு வினாக்களை அடக்கிய ஒரு வினாக்களின் தொகுப்பு
- ☑ நுண்ணறிவுத்தொடர் 2 - கட்புலனறிவு
- ☑ விஞ்ஞான பரிசோதனைகள்
- ☑ சிங்கள, ஆங்கிலப் பாட பயிற்சிகள்




ரூபா 100/= ரூபா 120/= ரூபா 120/=

- ☑ மாணவர்களின் சித்திரங்கள்
- ☑ கதைக்குள் ஒரு கணிதப்புதிர் - 04, குறுக்கெழுத்துப்போட்டி
- ☑ சிறுவர் திருக்குறள் சிறுகதை

தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களால் தொகுத்து வெளியிடப்படுகிறது

மேலதிக விபரங்களுக்கு :
011 5 200 900 | 074 1684643 | 0777 983308 | Junior Thamilan

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo –07